Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 06, 2022

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 06, 2022 | ஒளி: 08 கதிர்: 158 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



2023 ஆம் ஆண்டில் தடையில்லாமல்

## மின்சாரம் வழங்க அலகுக்கு ரூ.56.90

### குறை வருமானம் பெறுவோருக்கு பணம்

2023 ஆம் ஆண்டு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு, 1 அலகு மின்சாரத்துக்கு 56.90 ரூபாய் செலவாகும் என்று தெரிவித்த மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நேரடி பண கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று தான் நம்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கூறியது போல், மின் கட்டணத் திருத்தத்தின் மூலம் மின்சார சபையின் கடந்த கால நட்டங்களை மீட்பதற்கு அரசாங்கம் முன்மொழியவில்லை என்றும் தனது டுவிட்டர் பதிவின் மூலம் நேற்று (05) சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள

# அதிகாரப் பகிர்வால் நாடு பிளவடையாது

### நீதி அமைச்சர் அறிவிக்க வேண்டும் என்கிறார் சுமந்திரன்

பா.நிரோஸ்

சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வால் நாடு பிளவடையாது என்பதை சட்டம் படித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் எம்.பி, சமஷ்டி என்பது தவறான சொல் அல்ல எனவும் தெரிவித்தார்.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வால் தமிழ் மக்களது மட்டுமல்லாது உலக நாடுகளின் உதவியும் இலங்கைக்கு கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

“சமஷ்டி முறையின் கீழான அர்த்தமுள்ள அதிகார பகிர்வு, தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது. சமஷ்டி என்பது தவறான சொல் அல்ல. உலகின் பலம்மிக்க நாடுகள் அனைத்தும் இந்தமுறையையே பின்பற்றுகின்றன. சட்டம் படித்த நீதி அமைச்சர், சமஷ்டியால் நாடு பிளவுபடும் ஆபத்து இல்லை



என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்” எனவும் தெரிவித்தார்.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான வரவு செலவு நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் நேற்று (05) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், “நாம் தீர்வுக்கு வரத் தயாராக இருக்கிறோம். இது எங்களது மக்களுக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் நல்லது. நாட்டில் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தீர்வை வழங்க வேண்டும்” என சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

“தேர்தல் நடத்த வேண்டுமென நாம் கோரும்போது, தேர்தலை நடத்த 11 பில்லியன்கள் தேவை. இவ்வாறான நிலையில் எவ்வாறு தேர்தலை நடத்த முடியும் என கேட்கிறார்கள். ஆனால், இலங்கை விமான சேவைகள் 2022 - 2023ஆம் ஆண்டில் மாத்திரம் 112.8 பில்லியன் நட்டமடைந்துள்ளது.

தொடர்ச்சி P2



## தேர்தலை நடத்துவதற்கு இதுவே சரியான தருணம்

### அரசியலில் தொடர்ந்தும் இருப்பேன் என்கிறார் பசில்

இலங்கையில் தேர்தல் நடத்துவதற்கு இது சரியான தருணம் என்று தெரிவித்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தகுதி தனக்கு இல்லை என்றாலும், அரசியலில் தொடர்ந்தும் இருப்பேன் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நிமலின் மனு நிராகரிப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பதவிகளில் இருந்து தன்னை நீக்குவதைத் தடுக்கும் வகையில், கட்சித் தலைரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுத்து, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தாக்கல் செய்த மனுவை கொழும்பு மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம, திங்கட்கிழமை (05) நிராகரித்தார்.

அமைச்சர் தாக்கல் செய்த குறித்த மனுவில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன, துமிந்த திஸாநாயக்க ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



PTAவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள

## தமிழ் கைதிகளை விடுதலை செய்க

பா.நிரோஸ்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் பல வருடங்களாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மின் கட்டண விவகாரம் சபையில் சூடுபிடித்தது

### அமைச்சர் இன்று விளக்கமளிப்பார் என்கிறது அரசாங்கம்

பா.நிரோஸ்

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுவதை நியாயப்படுத்தப்போவதில்லை என தெரிவித்த சபைமுதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, இரு கட்டங்களாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட உள்ளமை குறித்து மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர், சபையில் இன்று (06) விளக்கமளிப்பார் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மே 9 விவகாரம் குறித்த

## அறிக்கையை மறைக்க காரணம் என்ன?

பா.நிரோஸ்

நாடளாவிய ரீதியில், மே மாதம் 9 ஆம் திகதியன்று இடம்பெற்ற போராட்டம் குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி நியமித்த குழுவின் அறிக்கையை வெளியிடாது, அதனை மறைத்து

தொடர்ச்சி P2



## மொட்டு கட்சியின் கொள்கைகளை பின்பற்றுகிறார் ஜனாதிபதி ரணில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றார் என்று தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் இந்திய ஊடகத்துக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், பொதுத் தேர்தல் கட்டாயமாக நடத்தப்பட வேண்டும் எனவும் இதன்மூலம் யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதை மக்களே தீர்மானிப்பர் என்றும் இந்த நாட்டை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிக்கும் சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டதாகவும் கூறினார்.

இலங்கையில் ஓர் அரசாங்கம் உள்ளதா? அந்த அரசாங்கத்தால் என்ன பயன்? யார் எவருக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றார்? பொருளாதாரம் தொடர்பிலான அவர்களின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விகள் எழுவதாகவும் குறிப்பிட்டார்.

தவறாக நாட்டை நிர்வகித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, போராட்டத்தின் விளைவாக பதவியில் தொடர முடியாத நிலை ஏற்பட்ட போது, துரதிர்ஷ்டவசமாக ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட காரணங்களுக்காக அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக சுட்டிக்காட்டினார்.

நாட்டை ஆட்சி செய்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் நம்பகத்தன்மை கடுமையாக கேள்விக்கு உள்ளாக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலை தொடர்ந்தால் நாடு மேலும் மோசமான நிலையை அடையும் எனவும் முழு நாடும் எதிர்க்கும் ஒரு தரப்பினர் எவ்வாறு ஆட்சியை தொடர முடியும் எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

## மீண்டும் விலையை உயர்த்தியது லிட்ரோ




உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் நேற்று (05) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்தது.

12.5, 5 மற்றும் 2.3 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டர்கள் முறையே 250, 100, 45 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



திருமலையில் இருந்து

## சட்டவிரோதமாக ஆஸிக்கு பயணித்த 20 பேர் கைது

கனகராசா சரவணன்

திருகோணமலையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக இயந்திரப்படகில் பயணித்த 20 பேரை சம்பூர் கடல் பரப்பில் வைத்து, திங்கட்கிழமை (05) அதிகாலை கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பூர் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு சோதனையில் 20 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

மரண தண்டனை நிறைவேற்றியிருந்தால்

## போதைப்பொருள் தீவிரமாகி இருக்காது



பா.நிரோஸ்

நான் தீர்மானித்தமைக்கு அமைய, சிறைச்சாலைகளில் உள்ள போதைப்பொருள் வியாபாரிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றியிருந்தால் நாட்டில் போதைப்பொருள் தீவிரமடைந்திருக்காது என்று முன்னாள் ஜனாதிபதியும் எம்.பியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (05) விசேட கூற்றை முன்வைத்த போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “நல்லாட்சியில் தனது பணிக்குழுவின் செயற்பாடுகளுக்கு அதிக நிதி செலவிடப்பட்டுள்ளதாக பிரதான நிலை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


தொடர்ச்சி P2

கம்பஹா பாடசாலை

## சிற்றுண்டிச்சாலையில் ஐஸ் போதைப்பொருள்

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டி பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் சிற்றுண்டிச்சாலையிலிருந்து போதைப்பொருட்கள் மீட்கப்பட்டதுடன், பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மல்வத்துஹிரிபிட்டி பொலிஸார் தெரிவித்தார்.

குறித்த சிற்றுண்டிச்சாலையிலிருந்து 05 பக்கெட் ஐஸ்



போதைப்பொருள் மற்றும் 38 போதை மாத்திரைகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



குறைந்த வருமானம் பெறும்

## சா/தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ரூ.5,000

2021 (2022) ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முதல் முறையாக தோற்றி, ஒரே தடவையில் சித்தியடைந்து 2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வேலைத் திட்டத்துக்கு, தகுதியுடைய மாணவ,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மின்சாரம்...

தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கும் தற்போதைய மின் விநியோக செலவை மீட்டெடுப்பதற்கும் தானியங்கி செலவு-பிரதிபலிப்பு கட்டண பொறிமுறையை செயற்படுத்த வேண்டும் என்பதற்காக முன்வைக்கப்பட்ட திட்டம் என்றும் குறிப்பிட்டார்.

தற்போதைய சராசரி கட்டணம் 29.14 ரூபாயாகவும், பற்றாக்குறை 423.5 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், மின்சார சபையின் கட்டண தரவுகளின்படி 6,709,574 உள்நாட்டு நுகர்வோர் உள்ளனர் என்றார்.

0-30 அலகு பிரிவில் 1,460,828 நுகர்வோர் இருப்பதாகவும் அவர்கள் ஓர் அலகுக்கு 8 ரூபாயை செலுத்துவதாகவும் 30-60 அலகு பிரிவு 1,683,172 நுகர்வோரைக் கொண்டிருப்பதாகவும், ஓர் அலகுக்கு அவர்கள் 10 ரூபாயை செலுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

60-90 அலகு பிரிவில் 1,702,515 நுகர்வோர்கள் ஓர் அலகுக்கு ரூ.16 செலுத்துகின்றனர் என்றும் 90-180 அலகு பிரிவில் 1,559,131 நுகர்வோர் ஓர் அலகுக்கு 50 ரூபாயையும் 180 அலகுக்கு மேல் பயன்படுத்தும் 303,928 நுகர்வோர்கள் ஓர் அலகுக்கு 75 ரூபாய் செலுத்துவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அடுத்த ஆண்டு முதல் ஓர் அலகுக்கான கட்டணத்தை 56.90 ரூபாயாக அதிகரித்து, குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் மிகுதி திறைசேரியால் ஈடுகட்டப்படும் என்றும் தெரிவித்தார்.

## தேர்தலை...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஊடக மையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் திங்கட்கிழமை (05) கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைய தேர்தல்களில் வெற்றி பெற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை ஆதரித்த மக்களுக்கு நன்றி தெரிவித்த அவர், மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாமல் போனமைக்கு மன்னிப்பும் கோரியதுடன், பின்னடைவுகளை நிவர்த்தி செய்து, தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஆளுகை அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தகுதி தனக்கு இல்லையென்றாலும், அரசியலில் தொடர்ந்தும் இருப்பேன் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், மீண்டும் பாராளுமன்றத்துக்குள் பிரவேசிக்க முடியாமல் போனதில் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்த அவர், ஜனாதிபதியின் பணிகளை பாராட்டினார்.

## தமிழ் கைதிகளை...

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான வரவு செலவு நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் நேற்று (05) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், "பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல சந்தேகநபர்களாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக சிலரது வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் நிலையில் 10 - 15 வருடங்களாக சிறைச்சாலையில் இருக்கிறார்கள்" எனவும் தெரிவித்தார்.

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலரை தனிப்பட்ட ரீதியில் சந்தித்தித்து கலந்துரையாடியிருக்கிறேன். சிவலிங்கம் ஆருரன் என்பவர் கடந்த 11 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்" என்றார்.

"சிவலிங்கம் ஆருரன் அண்மையில் அரச இலக்கிய விருது விழாவில் இரண்டாவது முறையாகவும் விருதுகளை பெற்றுள்ளார். முதல் தடவை இந்த விருதைப் பெறச் செல்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் அவருக்கு அனுமதியை வழங்கவில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

"அதுபோல பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பலர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

# அதிகாரப் பகிர்வால் நாடு பிளவடையாது

அதாவது ஒரு மாதத்துக்கு தேர்தலை நடத்துவதற்கு செலவிட வேண்டிய நிதியை நட்டமடைகிறது" என்று சுட்டிக்காட்டினார்.

"5 வருடங்கள் இருக்கிற போது இப்போது ஏன் தேர்தலை நடத்த வேண்டுமென கேட்கலாம். ஆனால், கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு வழங்கிய மக்கள் ஆணையை இந்த அரசாங்கம் இழந்துள்ளது" என்றார்.

"நீதி அமைச்சர், ஊழல் மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைத்து பாராளுமன்றத்தில் பேசுகிறார். உண்மையில் எதிர்க்கட்சியினர் போல அவர் பேசிக்கொண்டிருக்கிறார். குற்றச்சாட்டுகளை முன்வைப்பது எதிர்க்கட்சியினரின் கடமை. ஆனால், குற்றச்சாட்டுகளை கண்டறிந்து அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதே அமைச்சரின் பொறுப்பு" என சுமந்திரன் எம்.பி குறிப்பிட்டார்.

"நீதி அமைச்சர் விஜயதாஸ, எத்தனை முறை பாராளுமன்றத்தில் ஆளும், எதிர்க்கட்சி பக்கம் சென்றுள்ளார் என்பது தெரியவில்லை. அவருக்கே அதனை நினைவில் வைத்துக்கொள்ள முடியாதளவுக்கு அவர் அந்த பக்கமும் இந்த பக்கமும் சென்று வந்திருக்கலாம்" என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த நீதி அமைச்சர் விஜயதாஸ, "எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவிகளுக்காகவோ அல்லது எதனையும் பெற்றுக்கொள்வதற்காக நான் கட்சி மாறியதில்லை. குறிப்பாக வழமையாக நான் அரசாங்கத்திலிருந்து எதிர்க்கட்சி பக்கமே சென்றுள்ளேன். இம்முறையே எதிர்க்கட்சி பக்கமிருந்து ஆளுந்தரப்புக்கு வந்துள்ளேன். ஆனால் ஆளுந்தரப்பிலேயே தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றேன்" என்று தெரிவித்தார்.

## நிமலின் மனு...

தற்போதைய பிரதமர் பதவியேற்றதன் பின்னர் அமைச்சரவைப் பதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் இடம்பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்துரையாடியதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

கட்சியில் தாம் வகித்து வந்த பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டதாக தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் கட்சியின் யாப்பின் கீழ், தம்மை எந்தப் பதவியில் இருந்தும் நீக்குவதற்கு மத்திய செயற்குழுவுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர், அகில இலங்கை செயற்குழு உறுப்பினர், பதுளை மாவட்டத் தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர் ஆகிய பதவிகளில் இருந்து தான் நீக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## மின் கட்டண...

மேலும், மின்நிலையங்களை 8 பிரிவுகளாகப் பிரிக்கப்போவதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை எனவும், இது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டிருந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உள்ளிட்டோர் மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய சஜித் பிரேமதாஸ, "தற்போது மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் மின்சாரக் கட்டணத்தை இரு கட்டங்களாக அதிகரிக்கப்போவதாக அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்தால் மக்கள் மீது மின்சாரம் தாக்கியுள்ளது. மின்சாரக் கட்டணத்தை மேலும் அதிகரிக்க இடமளிக்கப்போவதில்லை என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிக்கிறது.

இவ்வாறான நிலையில் மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? இல்லாவிட்டால் மனிதாபிமான அடிப்படையில் மக்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்கப் போகின்றீர்களா" எனவும் கேள்வி எழுப்பினார்.

"ஒரு பக்கம் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கப்போவதாகக் கூறும் அரசாங்கம் மறுப்பக்கம் வங்குரோத்தடைந்த இலங்கை விமான சேவைகள் நிறுவனத்துக்கு மேலும் 11 விமானங்களைக் கொள்வனவு செய்ய உள்ளது. இதுபோன்ற வீணான கொடுக்கல் வாங்கல்களுக்காகவா மின்கட்டணம் அதிகரிக்கப்படுகிறது" எனவும் கேள்வி எழுப்பினார்.

இதன்போது உரையாற்றிய விமல் வீரவன்ச எம்.பி, "சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமையவே மின்சாரக் கட்டணம் அண்மையில் அதிகரிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகரிப்பால் பெறப்பட்ட இலாபத்திலிருந்து மின்சார சபையை நட்டமில்லாது இயக்க முடியும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு கூறுகிறத்.

இவ்வாறான நிலையில் மின்கட்டணம் மீள அதிகரிக்கப்படுவதால் பொதுமக்கள் மாத்திரமின்றி நாட்டின் தொழிற்றுறைக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும்" எனவும் தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராரச்சி, ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்கள் தொடர்பிலேயே சிந்திக்க வேண்டும். மின்சாரக் கட்டணத்தை மேலும் அதிகரித்தால் அதனால் அனைவருக்குமே சிரமம் ஏற்படும். எனவே, மின்கட்டண அதிகரிப்பில் நிவாரணம் வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சியின் பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, "மின்சார சபையை 8 பிரிவுகளாக பிரிக்கப்போவதாக தெரிவித்திருக்கின்றது. இவ்வாறு அரச வளங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை இருக்கிறதா? தேசிய வளங்களை விற்பனை பாதுகாப்பதாக தெவித்து ஆட்சிக்கு அந்த இவர்கள் தற்போது மின்சார சபையை 8 பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்ய தீர்மானித்திருக்கின்றார்கள். இதனை எவ்வாறு செய்ய முடியும்?" என்று கேள்வியெழுப்பினார்.

ஆளும், எதிர்க்கட்சி எம்.பிகளின் கேள்விக்கு அரசாங்கத்தின் சார்பில் பதிலளித்த சபைமுதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, "மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படப்போவதை நான் நியாயப்படுத்தப்போவதில்லை. இது தொடர்பில் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் இது தொடர்பில் இன்று (06) சபையில் விளக்கமளிப்பார்" எனவும் பதில் வழங்கினார்.

## அறிக்கையை மறைக்க...

வைத்திருப்பதற்கான காரணம் என்ன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எம்.பியுமான விமல் வீரவன்ச கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (05) ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்தே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியதுடன், மேலும் தெரிவிக்கையில், " மே 9 ஆம் திகதி நாடு முழுவதும் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐவர் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது.

அதன்படி அந்தக் குழு, அது தொடர்பான அறிக்கையை முன்னாள் ஜனாதிபதியிடமோ அல்லது தற்போதைய ஜனாதிபதியிடமோ சமர்ப்பித்துள்ளது.

இவ்வாறான குழுக்களுக்கு மக்கள் பணமே செலவிடப்படுகின்ற நிலையில், இவ்வாறு அமைக்கப்படும் குழுக்களின் அறிக்கைகளில் உள்ள விடயங்களை அறிந்துகொள்ளும் உரிமை பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் உள்ளது.

அதன்படி அறிக்கையை வெளிப்படுத்தாது மறைத்து வைத்துக்கொண்டிருந்தால் குழுக்களை அமைப்பதற்கான நோக்கம் பயனற்றதாகிவிடும். இதனால் குறித்த குழுவின் அறிக்கையை எதற்காக மறைத்து வைத்திருக்க வேண்டும்" என்று வினவினார்.

அதற்கு பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, "இந்த அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளதா என்று ஆராய்ந்து அது தொடர்பான நடவடிக்கைகள் குறித்த அறிவிக்கின்றேன்" என்றார்.

## மீண்டும் விலையை...

அதற்கமைய 12.5 கிலோ நிறையுடைய சிலிண்டரின் விலை 4,360 ரூபாயில் இருந்து 4,610 ரூபாயாக உயர்ந்துள்ளது.

1,750 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,850 ரூபாயாகவும், 815 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 860 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக...

கைது செய்யப்பட்டவர்களை திருகோணமலை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் அவர்கள் களுவாஞ்சிக்குடி நாகர்கோவில் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்த கடற்படையினர், திருகோணமலை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கவுள்ளதாக தெரிவித்தனர்.

## போதைப் பொருள்...

எனது ஆட்சியில் தேசிய மட்ட 7 செயற்றிட்ட குழுக்களை நியமித்தேன். தேசிய போதைப்பொருள் செயலணி அக்காலக்கட்டத்தில் சிறந்த முறையில் செயற்பட்டது.

நீதிமன்றத்தால் மரண தண்டனை தீர்ப்பு விதிக்கப்பட்ட நிலையில் சிறைச்சாலையில் இருந்தவாறு போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு மரண தண்டனையை செயற்படுத்த தீர்மானித்தேன்.

மரண தண்டணையை நிறைவேற்ற எடுத்த தீர்மானத்திற்கு எதிராக ஒருதரப்பினர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்தனர். மரண தண்டனையை நிறைவேற்றும் தீர்மானம் செயற்படுத்தப்பட்டிருந்தால் நாட்டில் இன்று போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனை இந்தளவிற்கு தீவிரமடைந்திருக்காது" என்றார்.

## சிற்றுண்டிச்சாலையில்...

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த உணவகத்தை சோதனையிட்ட போது குறித்த போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், சிற்றுண்டிச்சாலையை நடத்திச்சென்ற 42 வயதான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## சா/தரத்தில் சித்தியடைந்த...

மாணவிகளை விண்ணப்பிகக் கோரி ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க நவம்பர் 30 ஆம் திகதி கல்வியமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

அதற்கமைய புலமைப்பரிசில் கோரி விண்ணப்பிக்கும் மாணவர்கள், மாதாந்த குடும்ப வருமானமாக 75,000/- ரூபாய்க்கு குறைந்தவராகவும், அரசாங்க பாடசாலையில் அல்லது எவ்வித கட்டணமும் அறவிடப்படாத பாடசாலையில் கல்வி கற்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பதாரர்கள் 2021 (2022) ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றியிருப்பதுடன் ஒரே தடவையில் சித்தியடைந்து 2024 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான முழுமையான தகுதியை கொண்டவர்களாக இருப்பது அவசியமாகும்.

இதற்கமைய ஒரு கல்வி வலயத்தைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். மேலும், தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபாய் வீதம் ஆகக்கூடியது 24 மாதங்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இது தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்கெனவே கல்வி அமைச்சால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் அதிபரிடமிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று தமது குடும்ப பொருளாதார நிலைமை தொடர்பான கிராம உத்தியோகத்தரின் பரிந்துரையுடன், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 23.12.2022ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர்.

# மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகளா?

### சாணக்கியன் கேள்வி


வ. சக்தி

மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இரா. சாணக்கியனின் மட்டக்களப்பு மத்திய வீதியில் அமைந்துள்ள மக்கள் சந்திப்பு காரியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பெயர் பலகையை, இனம் தெரியாத விசமிகள் ஞாயிற்றுக்கிழமை (04) இரவு சேதமாக்கியுள்ளனர். அத்துடன், அங்கு பொருத்தப்பட்டிருந்த சோலார் மின்விளக்கும் திருடிச் செல்லப்பட்டுள்ளது.



இந்தநிலையில், இதுகுறித்து கருத்து வெளியிடும் போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார். மக்கள் தற்போது ஓரளவுக்கேனும் நிம்மதியாக வாழ்ந்து வருகின்ற நிலையில், மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



பா. நிரோஷ்
ddnirosh@gmail.com

# 31 புலிக்கைதிகளே சிறைச்சாலையில் இருக்கிறார்கள்

சிறைச்சாலையில் தமிழீழ விடுதலைப் புலிக் கைதிகள் வெறும் 31 பேரே இருப்பதாகவும் இதில் 16 பேர் குற்றவாளிகள் எனவும், 15 பேர் சந்தேகநபர்கள் என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெருமவின் உரைக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015ஆம்ஆண்டு நீதி அமைச்சைப் பொறுப்பேற்கும் போது, தமிழீழ விடுதலைப் புலி சிறைக் கைதிகள் 400 பேர் சிறைச்சாலையில் இருந்தனர். இவர்களின் எண்ணிக்கையை நான் 110 ஆகக்குறைத்தேன். மேலும் அவர்களது வழக்குகளை விரைவாக விசாரிக்க வேண்டுமென கொழும்பு, அநுராதபுரத்தில் இரு மேல்நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டன.

இதேவேளை சிறைச்சாலையில் உள்ள அனைத்துக் கைதிகள் தொடர்பான தகவல்களையும் நான் கோரியிருக்கிறேன். இதன்படி சிறைச்சாலையில் இருப்பதற்குப் பொருத்தமற்ற கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் ஆராயகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் டலஸ்அழகப்பெரும, தாய்மார்கள் சிறைச்சாலையில் இருக்கிறார்கள் என்கிற காரணத்தால் 14 ஆண், 13 பெண்பிள்ளைகள் என 27 பிள்ளைகளும் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். இவர்கள் தொடர்பில் நடவடிக்கை வேலைத்திட்டம் அவசியம் எனவும் இதன்போது நீதிஅமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் விஜயதாஸ, இது தொடர்பில் தான்அவதானம் செலுத்தியதாகவும் இந்தப் பிள்ளைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும், கல்வியைத் தொடர்வதற்கான வசதிகளையும் செய்துகொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

# இலங்கை குடியுரிமை இல்லாத எம்.பியை வெளியேற்ற வேண்டும்



இலங்கைக் குடியுரிமை இல்லாத பாராளுமன்ற உறுப்பினரை உடனடியாகப் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

இலங்கை குடியுரிமை இல்லாத பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிந்து வைத்திருந்தும் அவர் பாராளுமன்றத்தில் தொடர்ந்து இருக்க அனுமதி வழங்கியுள்ளார்.

21ஆவது திருத்தச் சட்டத்துக்கு நான் கையெழுத்திட்டு ஆதரவளித்திருக்கிறேன். சபாநாயகரும் அச்சட்டத்தை சான்றுரைப்படுத்தியுள்ளார். எனவே, இந்த விடயத்தில் உயர்நீதிமன்றத்துக்கு செல்லவேண்டிய அவசியமில்லை. உடனடியாக இலங்கை குடியுரிமை இல்லாத அப் பெண் பாராளுமன்ற உறுப்பினரை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றார்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கு இலங்கை குடியுரிமை இல்லை என்பது தொடர்பான ஆவணங்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஆவணங்களை செயலாளர் மறைத்து வைத்திருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

**பாராளுமன்ற உறுப்பினருக்கு இலங்கை குடியுரிமை இல்லை என்பது தொடர்பான ஆவணங்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஆவணங்களை மறைத்து வைத்துள்ளார்**

## பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமான

# ஊழல் மோசடிகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசுவதில்லை



நாட்டின் பொருளாதாரத்தை வீழ்த்துவதற்குக் காரணமான ஊழல் மோசடிகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசப்படுவதில்லை எனத் தெரிவிக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இதனால் ஏற்பட்டுள்ள வெறுப்பையே மக்கள் வீதிக்கு இறங்கி வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான வரவுசெலவு நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் நேற்று (05) கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடுமுழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் வெறும் 13 ஆயிரம் கைதிகளே இருக்க வேண்டிய நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 26 ஆயிரத்தைத் எட்டியுள்ளது. இதனால் இந்த 26 ஆயிரம் கைதிகளையும் பராமரிப்பதற்கு அதிகம் செலவாவதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கைதிகளில் 60 சதவீதமானவர்கள் போதைப்பொருள் குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் எனவும், 6,000 கைதிகள் குற்றவாளிகள் எனவும் ஏனையோர் சந்தேகநபர்கள் எனவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் அனைவரையும் விளக்கமறியலில் வைக்கிறார்கள். இதுவொரு கலாசாரமாக மாறியுள்ளது. சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதற்கு இதுவொரு காரணம் எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜயதாஸ, இதுவொரு கலாசாரமாகவே மாறியுள்ளது. இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். இது தொடர்பில் புதிய சட்டங்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

1973ஆம் ஆண்டு சொத்துகள் மற்றும் பொறுப்புகள் சட்டமானது காலாவதியாகியுள்ளது. இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் ஊடாக இதனை சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் கண்காணித்து தொடர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொருளாதாரம் வீழ்ந்துள்ள நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த முடியாது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் தொடர்பான நிதியை கடந்த 12 வருடங்களாக செலுத்தவில்லை. இதுவொரு பாரிய நிதி. நாட்டின் மொத்தக் கடனே 52 பில்லியன் டொலராக இருக்கிற நிலையில், ஏற்றுமதியின் ஊடாகக் கிடைக்க வேண்டிய 53.5 பில்லியன்கள் டொலர் இதுவரையில கிடைக்கவில்லை.

இந்த 53 பில்லியன் டொலரை பாரிய வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மறைத்து வைத்துள்ளனர். இதற்கு மத்திய வங்கி பொறுப்புக்கூற வேண்டும். மத்திய வங்கியின் கடந்தக் கால அசமந்தச் செயற்பாடுகளே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம். ஆனால் நாட்டு மக்கள் பாராளுமன்றத்தில் அனைவரையும் குற்றஞ்சுமத்துகிறார்கள்.

இந்த 53 பில்லியன் டொலர் கிடைத்திருந்தால் இலங்கை கடன் பெற்றிருக்காது. இந்த நிதியை மறைத்து வைத்திருக்கும் பாரிய நிறுவனங்களின் பெயர்கள் எமக்கு தெரியும் எனவும் தெரிவித்தார்.

## இலங்கை குடியுரிமை இல்லாத

# பிரித்தானியர் ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்கிறார்



பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்குப் புறம்பாக பிரத்தானியக் குடியுரிமை கொண்ட பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் இருப்பதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பின முஜிபூர் ரஹ்மான், குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்ட ஆவணங்களுக்கு அமைய அப்பாராளுமன்ற உறுப்பினருக்கு இலங்கை குடியுரிமை இல்லை எனவும் தெரிவித்தார்.

சட்டத்தை நாம் அனைவரும் மதிக்க வேண்டும். சட்டத்தை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தில் உள்ள ஓர் எம்.பி சட்டத்தை மீறிவருகிறார். ஆனால், அவர் தொடர்பில் பாராளுமன்றத்தில் உள்ள பலரும் மௌனமான இருக்கிறார்கள்.

பிரித்தானிய குடியுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தனக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பான ஆவணங்களை நான் சபைப்படுத்து கிறேன் என்றார்.

21ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் பிரித்தானியக் குடியுரிமை கொண்ட இலங்கை குடியுரிமை இல்லாத பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்கிறார் என்றார்.

# ஜனாதிபதி ரணில் பாராளுமன்றத்தை அவமதிக்கிறார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தை அவமதிப்பதோடு, பாராளுமன்றத்தை சவாலுக்கு உட்படுத்துவதாகவும் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவருமான ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சுமத்தினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

“ஒரேயடியாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்தது. பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் இரு வருடங்களுக்கு முன்பே அறிந்து வைத்திருந்தபோதிலும் இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு எவரும் அறிவிக்கவில்லை. குறிப்பாக பெரும்பான்மை பலத்தைக் கொண்ட ஆளுங்கட்சியினரும் இது தொடர்பில் பாராளுமன்றத்தை தெளிவூட்டவில்லை.

அதுபோல எதிர்க்கட்சியும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை என ஜனாதிபதி கூறியதாக பத்திரிக்கை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கு வருவதற்கு முன்னரே எதிர்க்கட்சியாகிய நாம் பாராளுமன்றத்துக்கு அறிவித்து வந்துள்ளோம். இவ்வாறான நிலையில் இது தொடர்பில் பேசவில்லை எனக் கூறி பாராளுமன்றத்தை ஜனாதிபதி சவாலுக்கு உட்படுத்துவதோடு, அவமதிப்பு செய்துள்ளார். ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்றத்தை சவாலுக்குட்படுத்தி அவமதிப்பது பொறுத்தமற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தவறான செய்திகளை ஊடகங்கள் வெளியிடுகின்றன

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சபையில் குற்றச்சாட்டு



தான் ஜனாதிபதியாக இருந்தபோது தனது தனிப்பட்டப் பணியாள் தொகுதியினருக்கு அதிகளவில் நிதியை செலவிட்டதாக ஊடகங்களில் வெளியாகிய செய்திகளில் உண்மையில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து தொடர்ந்து உரையாற்றிய மைத்திரி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தானும் ஜனாதிபதி செயலகத்தை நடத்துவதற்கு அதிகளவில் செலவிட்டுள்ளதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பாக ஜனாதிபதி செயலகத்தின் பணிகளுக்காக நான் 1,480 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளதாக செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 43 சதவீதமும், தான் 57 சதவீதமும் ஜனாதிபதிக்கான நிதியிலிருந்து எங்களது தனிப்பட்ட பணியாள் தொகுதிக்கு செலவிட்டுள்ளதாகவும் தகவலறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி பெறப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது உண்மைக்குப் புறம்பான செய்தி.

“எனது ஆட்சிக் காலத்தில் நான் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் சர்வதேசம் வரையில் பேசப்பட்டன. அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக எனக்கு வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தியிருந்தேன். எனினும் இது தொடர்பில் தவறான தகவல்கள் வழங்கப்பட்டு செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தச் செய்திகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டாம். ஆனால், இந்தச் செய்திகளை திருத்தி மீள பிரசுரிக்க வேண்டும் எனவும் ஊடகங்களுக்கு அறிவிக்க வேண்டும்” என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

# மே 9 விசாரணை அறிக்கையை மறைப்பது ஏன்?



மே 9ஆம் திகதி நாடு முழுவதிலும் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஐவர் அடங்கியக் குழு விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, இந்த விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஏன் அந்த அறிக்கையை அரசாங்கம் மறைத்து வைத்திருக்கிறதெனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மே 9ஆம் திகதி நாடுமுழுவதிலும் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரணாகொட உள்ளிட்ட ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இக்குழு மே 9ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அல்லது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் வழங்கியிருந்தது. இந்த விசாரணைக்கு பொதுமக்கள் பணமே பயன்படுத்தப்பட்டதால், இந்த விசாரணை அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதை தெரிந்துகொள்வதற்கான உரிமை இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

எனவே, இந்த விசாரணை அறிக்கையை மறைத்து வைத்திருக்க வேண்டாம். அவ்வாறு செய்வதால் இந்த விசாரணைக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறாது எனவும் தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த சபைமுதல் சுசில் பிரேமஜயந்த, இந்த விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடமே ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பில் ஆராய்ந்து பதிலளக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த விமல், இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பல வாரங்கள் ஆகியுள்ளன. ஏன் இந்த அறிக்கையை மறைத்து வைத்திருக்கிறீர்கள்? எனவே இந்த அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக

# பூர்வீக விவசாய காணிகளை கையகப்படுத்துவதை நிறுத்துமாறு ஆர்ப்பாட்டம்

பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் நீண்ட காலமாக விவசாயம் செய்கை பண்ணப்படும் பூர்வீக காணிகளை, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை கையகப்படுத்தும் நோக்கத்துடன் அளவீடு செய்ய மேற்கொள்ளும் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு கோரி, கிரான் பிரதேசத்தில் நேற்று (05) ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கிரான், வாழைச்சேனை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய அமைப்புகளின் ஏற்பாட்டில், கிரான் - புலிபாந்தகலை வீதியில் ஒன்று கூடிய விவசாயிகள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 9,942 குடும்பங்களின் வாழ்வாதார காணிகளை அபகரிப்பதை உடனடியாக நிறுத்துமாறும் மகாவலித் திட்டம் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடங்களை அபகரிக்கும் சதித் திட்டத்தை நிறுத்துமாறும், மகாவலியே அவசரமாக எமது காணிகளை அளப்பதன் நோக்கம் என்ன? போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பினர்.





ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தன் பிரகாரம், மகாவலித் திட்டக் காணிகள் விகிதாசார ரீதியில் வழங்கப்பட வேண்டும். மகாவலி திட்ட காணிகள் சிங்கள மக்களுக்கு 96.16 சதவீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 21 சதவீத காணிகள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளன. 24 சதவீதம் இருக்கின்ற தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு 24 சத வீத காணி வழங்கப்படுவதற்கு பதிலாக 3.8 சதவீத மகாவலி காணி வழங்கப்பட்டுள்ளன. தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளே உள்ளன. இவை எமது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கூறினர்.

ஆர்பாட்டம் நடைபெற்ற இடத்துக்கு வருகை தந்த பிரதேச செயலாளர் சு. ராஜ்பாபு ஆர்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடியதுடன் கோரிக்கைகள் அடங்கிய மனு வையும் பெற்றுக்கொண்டார். குறித்த விடயம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்புபட்டு இருப்பதால் டிசெம்பர் 12ஆம் திகதி மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டம் நடைபெறவிருப்பதால், அவர்களுடன் கலந்துரையாடி மேலதிக விளக்கங்களைப் பெற முடியும் என்றார்.



# கழிவு பொருட்களில் ஒளிவிழா போட்டி



மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவக ஊழியர்களுக்கு இடையிலான ஒளிவிழா போட்டி வெள்ளிக்கிழமை (02) நடைபெற்றது. இயற்கை மற்றும் கழிவு பொருட்களை கொண்டு கிறிஸ்மஸ் நிகழ்வைப் பிரதிபலிக்கும் வகையில், ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டு, வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், பரிசுகள் கரித்தாஸ் எகெட் நிறுவகத்தால் நடத்தப்படவுள்ள ஒளிவிழாவில் வழங்கப்படவுள்ளது.
கரித்தாஸ் எகெட் நிறுவக இயக்குநர் அருட்பணி ஏ .ஜேசுதாசன் அடிகளாரின் ஆலோசனைக்கு அமைவாக, கரித்தாஸ் எகெட் நிறுவக ஊழியர்களின் ஆக்கத்திறன் ஒளிவிழா போட்டி நிகழ்வு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம். எஸ். எம் நூர்தீன்



# காரைதீவு பிரதேச சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

வி.ரி சகாதேவராஜா

காரைதீவு பிரதேச சபையின் ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் நேற்று (05) திங்கட்கிழமை ஏக மனதாக நிறைவேறியது.

சபையின் 58 ஆவது மாதாந்த அமர்வு, தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற போது, ஒன்பது உறுப்பினர்கள் கலந்து கொண்டு, 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்திருந்தார்கள்.

இன்றைய அமர்வில், காரைதீவு விபுலானந்தா தேசிய கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களான மாணவர்கள் சமூக மளித்து சபை அமர்வை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஒரு மரத்தால் 12 பேர் உயிர் வாழ்கின்றார்கள்

வி.ரி சகாதேவராஜா

ஒரு மரத்தால் 12 பேர் சுவாசிக்கின்றார்கள்; அதாவது உயிர் வாழ்கின்றார்கள். எனவே ஒரு மரம் வெட்டப்பட்டால் 12 பேர் சுவாசிப்பதற்கு முடியாமல் இறக்க வேண்டி நேரிடும் என்பதை மறந்து விட வேண்டாம் என்று சம்மாந்துறையைச் சேர்ந்த பசுமை மீட்சி இயக்கத்தின் தலைவி மின்மினி மின்ஹா தெரிவித்தார்.

மின்ஹா பசுமை மீட்சி பேரவையின் மாவட்ட கிளை அங்குரார்ப்பண வைபவமும் 'செந்தூரம்' இதழ் விநியோகமும் நேற்றுமுன்தினம் (04) சம்மாந்துறையில் நடைபெற்றது.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பேச்சு போட்டி அறிவிப்பு போட்டிகளில் வெற்றி பெற்ற, 11 வயது மாணவியான பாத்திமா மின்ஹாவின் தந்தையான ஆய்வு எழுத்தாளர் ஜலீல் ஜீயின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு சம்மாந்துறை அல் அர்சத் மகா வித்தியாலய அதிபர் எம்ஏ. ரஹீம் தலைமை தாங்கினார். பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவி கல்விப் பணிப்பாளரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான வி.ரி சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் மாணவி பாத்திமா மின்ஹா தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது: இலங்கையில் மொத்தமாக மனிதன் சுவாசிப்பதற்கு 20 சதவீதமான அடர்ந்த காடுகள் தேவையாகின்றது. ஆனால், தற்பொழுது 18 சதவீத காடுகளே இருக்கின்றன. எனவே, மரங்களை நாட்ட வேண்டிய கடமை மனிதர்களுக்கு இருக்கின்றது.

ஒரு மரம், ஒரு வருடத்திற்கு ஆறு தொன் காபனீரொக்சைட்டை உள்ளெடுத்து அதேயளவு ஒக்சிசனை வெளியிடுகின்றது. அதனைத் தான் அனைத்து உயிரினங்களும் சுவாசிக்கின்றன. ஆனால், நாங்கள் இப்படிப்பட்ட மரங்களின் பெறுமதியை அறியாமல், அவற்றை அழித்து வருகின்றோம்.

உலகில், வருடம் ஒன்றுக்கு 13.2 மில்லியன் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகின்றன. அதாவது இலங்கையை போல் இரண்டு மடங்கு பரப்பளவு கொண்ட காடுகள் அழிக்கப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு உலகளவில் 20 ஆயிரம் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகின்றன. ஒரு செக்கனில் ஒரு மைதானமளவு மரங்கள் வெட்டப்படுகின்றது என்றார்.

# கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளின் பெறுபேற்று அறிக்கையை மட்டும் கோரிய வடக்கு ஆளுநர்

எம். றொசாந்த்

கடற்தொழிலாளர்கள் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பெறுபேறுகளை சமர்ப்பிக்குமாறு, வடமாகாண ஆளுநரின் கடிதத்துக்கு அமைய, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது; கடற்றொழிலாளர்கள் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பெறுபேறுகளை 2011இல் இருந்து 2021 வரை பகுப்பாய்வு செய்து, டிசெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமாரை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு, பெறுபேறுகள் குறைவடைதல் தொடர்பில் பகுப்பாய்வு அறிக்கையை கோரியதாக தெரிவித்தார்.

எவ்வித இன, மத, சமூக பேதமும் இல்லாமல் பாடசாலையில் மாணவர்கள் கல்வி கற்கும் போது, குறிப்பிட்ட சமூகத்தின் விவரங்களை மாத்திரம் திரட்டுவது மாணவர்கள் மத்தியில் வேறுபாடுகளை உருவாக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.




# கிராஞ்சியில் வெளியாருக்கு அட்டை பண்ணை வழங்கவில்லை

கிராஞ்சியில் கடல் அட்டை பண்ணைகள் வேண்டாம் என போராட்டம் நடத்தும் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள், சுமார் 200 குடும்பங்களின் வாழ்க்கையை கெடுக்கும் வகையில் செயற்படுவது கவலை அளிப்பதாக, பூநகரி சிறீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தம்பிப்பிள்ளை மகேந்திரன் தெரிவித்தார்.

யாழ், ஊடக அமையத்தில் நேற்று (05) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடலட்டைப் பண்ணைகளை பெற்றுக்கொள்வதற்காக கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 203 உறுப்பினர்கள் விண்ணப்பித்து விட்டுக் காத்திருக்கின்றனர்.

கிராஞ்சியில் வெளியாருக்கு அட்டை பண்ணை வழங்கப்படவில்லை. ஆனால், கிராஞ்சியில் போராட்டம் நடத்துபவர்கள், பிணாமிகளின் பெயரில் பண்ணைகளை அமைத்துவிட்டு பண்ணை வேண்டாம் எனப் போராடுகின்றனர்.

எமது பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கான அட்டைப் பண்ணைகளை, தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



# அட்டைப் பண்ணைகளை அகற்றுமாறு கோருவோரை ஜே.வி.பி சந்தித்தது

சுப்பிரமணியம் பாஸ்கரன்

அட்டைப் பண்ணைகளை அகற்றக்கோரி 67 நாள்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை ஜே. வி. பி கட்சியினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி, இலவங்குடா பகுதியில் வாழ்வாதாரத் தொழில்களுக்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணைகளை அகற்றக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை, ஜே. வி. பி. கட்சியினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட கிராஞ்சி, இலவம்குடா கடற்பரப்பில் தங்களது வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி, பிரதேசத்தை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சிறுகடத் தொழிலாளர்கள் 67 ஆவது நாளாகவும் நேற்று (04) முன்னெடுக்க பட்ட வருகின்ற போராட்டத்திற்கு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களை சந்தித்து ஜே.வி.பி கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் கலந்துரையாடியுள்ளார்.

# 'வைத்தியர்' ஸ்ரிக்கர் ஒட்டிய காரில் போதைப்பொருள்

எம். றொசாந்த்

'வைத்தியர்' என அடையாளப்படுத்தும் ஸ்ரிக்கர் ஒட்டிய காரில், ஹெரோயின் போதைப்பொருளுடன் சென்ற இரண்டு இளைஞர்களை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர். காரில் பயணித்த இளைஞர்களில் ஒருவரிடம் 600 மில்லி கிராமும் மற்றைய இளைஞனிடம் 430 மில்லி கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர்களில் ஒருவரின் சகோதரர் வைத்தியர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனவும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

# தென்மாகாண உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் யாழ். விஜயம்



எம். றொசாந்த்

அரசியலில் பெண்களுக்கு அதிக சதவீத ஒதுக்கீடு வேண்டும் என தென்மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சபை பெண் உறுப்பினர் சம்பிக்க நிறைஞ்சலி தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கபே அமைப்பு ஊடாக 'ஜனனி' என்ற வேலை திட்டத்தை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்பித்தோம். தொடர்ச்சியாக பல பிரதேசங்களில் மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளோம்.

பெண்களில் 56% வீதம் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு தரவேண்டும். அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது. உண்மையில் பெண்கள் அரசியலுக்குள் கணவர் இறந்ததாலோ அல்லது தமது குடும்பம் அரசியலில் இருப்பதாலோ நுழைகின்றனர் என்றார்

தென்மாகாணத்திலுள்ள காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பில் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை நகர சபையின்

# வரவு செலவு திட்டம் தோல்வி

எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட கூட்டம், நேற்று (05) தவிசாளர் இருதயதாஸ் தலைமையில், நகர சபை மாநாட்டு மண்டபத்தில் கூடியது.

இதில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 6 பேரும், தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர் ஒருவருமாக 8 பேர் எதிராக வாக்களித்தனர்.

ஆதரவாக தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் 4 பேரும், தமிழர் விடுதலை கூட்டணியின் ஒருவர், சுயேட்சை குழு ஒருவர், ஈழ மக்கள் ஜநாயக கட்சி உறுப்பினர் ஒருவருமாக மொத்தம் ஏழு பேரும் வாக்களித்தனர்.

# வடக்கு ஆளுநர் செயலகம் முன்பாக வெள்ளிக்கிழமை போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்க அறிவிப்பு

எம். றொசாந்த்

வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக, பல்வேறுபட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வெள்ளிக்கிழமை (09) கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்க இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது. பாடசாலை நிறைவடைந்த பின்னர், பிற்பகல் 2 மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளது என யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வடமாகாண கல்வியமைச்சில் காணப்படும் சீர்கேடுகள் தொடர்பாக குறித்த போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம். மூன்றாம் தவணை ஆரம்பித்த போதும் இரண்டாம் தவணைப் பரீட்சையை வைக்கமுடியாத அளவுக்கு வடமாகாண கல்வித் திணைக்களத்தின் நிலைமை போயுள்ளது. இந்த நிலையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

தர்மத்தின் வழி சென்று

# ரணிலை நாம் எதிர்க்கின்றோம்

## என்கிறார் இராதா எம்.பி

எஸ்.கணேசன்

ரணில் விக்கிரமசிங்க நல்லவர்; சிறந்த அறிவாளி. ஆனாலும் அவர் தற்போது நிற்கும் பக்கம் தவறானது எனத் தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், எனவேதான் தர்மத்தின் வழி சென்று அவரை நாம் எதிர்க்கின்றோம் என்றார்.

வட்டவளையில் நேற்று (05) நடைபெற்ற மலையக மக்கள் முன்னணியின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

கர்ணன் சிறந்தவர்; நல்ல கொடையாளி. துரியோதனன் கூட்டத்துடன் நின்றதால் அவர் வதம் செய்யப்பட்டார். ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது இருக்கும் இடம் சரியில்லை. நாம் தர்மத்தின் பக்கம்தான் நிற்போம். ரணிலும், மஹிந்தவும் தர்மம் செய்யவில்லை. எனவே, தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும். ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் தேர்தல் அவசியம்.

இலங்கையின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்கு வருவதற்கு ராஜபக்ஷ குடும்பமே பிரதான காரணம். சீனாவிடமிருந்து




பெருந்தொகை கடன்பெற்று, அவை தேவையற்ற அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தப்பட்டன. காலியில் ஒரு துறைமுகம் இருக்கும் நிலையில், அதனை மேம்படுத்தாமல் ஹம்பாந்தோட்டையில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது. இதனால் என்ன பயன்?

போராட்டக்காரர்களுக்கு இடையூறு விளைவிக்கப்படமாட்டாது என பிரதமரான பின்னர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். ஆனால் ஜனாதிபதியான பிறகு மறுநொடியே போராட்டக்காரர்களை அகற்றினார். சொல் ஒன்று செயல் வேறுவடிவம் என்பதை அவர் நிரூபித்தார். உண்மையின் வழி நின்றகவில்லை.

அதேவேளை, மலையக தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்படும். தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க ஒன்றிணைந்து பயணிப்போம். அதற்கான சூழலை ஏற்படுத்தும் நடவடிக்கையில் விஜயசந்திரன் ஈடுபட்டுள்ளார் என்றார்.

# நிர்வாகத்துடனான பேச்சுவார்த்தை வெற்றி

## கிளனனோர் தோட்டத்திலிருந்து தேயிலையை வெளியேற்ற அனுமதி

கிளனனோர் தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் குறித்த தோட்ட நிர்வாகத்துடன் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், இதன்போது ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து, தோட்டத்தில் இருந்து தேயிலை தூளை ஏற்றுமதிக்கு வெளியேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளனனோர் தேயிலை தொழிற்சாலையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்ட அரைச் சம்பளம், முழு சம்பளம் வழங்க நிர்வாகம்



ஒப்புதல் வழங்கியது.

அத்துடன், வலுக்கட்டாயமாக 20 கிலோ கிராம் கொழுந்து பறிக்க வேண்டும் என்ற நிபந்தனை நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்டது. 20 கிலோ கிராம் வலுக்கட்டாயமாக நிர்ணயிக்க முடியாது எனவும், தேயிலை மலைகளுக்கு ஏற்ற வகையிலே நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும், 20 கிலோ கிராமாக இருந்த அடிப்படை தொகை 16 கிலோ கிராமாக குறைக்கப்பட்டது.

மேலும் ஒவ்வொரு நிறுவைக்கும் வலுக்கட்டாயமாக 3 கிலோ கிராம் தேயிலை குறைப்பு, நாளை முதல் ஒரு கிலோ கிராமாக மாற்றி அமைக்கப்பட்டதுடன், ஞாயிறு மற்றும் போயா நாள்களில் சம்பளம் வழங்குவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பில், தோட்ட நிர்வாகத்தால் வழங்கபட்ட ஒப்புதலை ஏற்று,இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத்தில் இருந்து தேயிலை தூளை ஏற்றுமதிக்கு வெளியேற்ற அனுமதி வழங்கியது.

கினிகத்தேனையில்

# அமோனியம் நைட்ரஜனுடன் இருவர் கைது

சுதத்.எச்.எம்.ஹேவா

அமோனியம் நைட்ரஜன் உள்ளிட்ட சில வெடிப் பொருட்களுடன் இருவர், கினிகத்தேனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கினிகத்தேனை பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் வைத்து சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர்கள் இருவரிடமிருந்து அமோனியம் நைட்ரஜன் 39,000 மில்லிகிராமும் மற்றுமொரு வெடிப்பொருள் 22,650 கிராமும் கைப்பற்றப்பட்டதாக கினிகத்தேனை பொலிஸ் நிலைய பிரதான பொறுப்பதிகாரி விராஜ் விதானகே தெரிவித்தார். சந்தேகநபர்கள் இருவரும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.



# முதலையால் சுற்றுலா பயணிகளுக்கு ஆபத்து

என்.ஆராச்சி

ரம்புக்கனை, பின்னவல மாஓயா பகுதியில் முதலையொன்றின் நடமாட்டம் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

பின்னவல பகுதியில் உள்ள யானைகள் காப்பகம், யானைகள் சரணாலயம் என்பவற்றைப் பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மாஓயா ஆற்றில் இறங்கி, பொழுது போக்கிச் செல்லும் நிலையில், குறித்த ஆற்றில் நடமாடும் முதலையால் சுற்றுலாப் பயணிகளுக்கு ஆபத்து நேரலாம் என பிரதேசவாசிகள் எச்சரித்துள்ளனர்.



# ‘தேத்தண்ணி’ நூல் அறிமுகவிழா

2022 ஆம் ஆண்டில் மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்ய விருதைப் பெற்றுக்கொண்ட சட்டத்தரணியும் எழுத்தாளருமான இரா. சடகோபனால் மொழியாக்கம் செய்யப்பட்ட ‘தேத்தண்ணி’ எனும் நூல் அறிமுக நிகழ்வு, கொழும்பு, பிரைட்டன் விடுதியில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ், கல்வி அமைச்சின் பெருந்தோட்ட பாடசாலைகள் அபிவிருத்திக்கான பிரதி பணிப்பாளர் சு. முரளிதரன், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் வாமதேவன், சட்டத்தரணி சேனாதிராஜா, புரவலர் ஹாசிம் உமர், மேமன் கவி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



ருக்மணிதேவி பிறந்த வைத்தியசாலை

# 11 வருடங்களாகப் பூட்டு

## நிலைமையை கண்காணித்த ஆளுநர்

மஹேஸ் கீர்த்திரத்ன

11 வருடங்களாக மூடப்பட்டிருக்கும் பெரட்டாசி பழைய வைத்தியசாலைக்கு மத்திய மாகாண ஆளுநர் லலித். யூ.கமகே கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இலங்கையின் பழம்பெரும் நடிகையான ருக்மணிதேவி பிறந்ததாகக் கூறப்படும் குறித்த வைத்தியசாலை, கொத்மலை பகுதியில் அமைந்திருப்பதுடன், மிகவும் பின்தங்கிய பிரதேசமாகவும் உள்ளது.

குறித்த பகுதிக்கு விஜயம் செய்தபோது பெரட்டாசி கிராம மக்கள் முகம்கொடுக்கும் போக்குவரத்து பிரச்சினை உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து ஆளுநர் கேட்டறிந்து



கொண்டார். இதன்போது இலங்கையின் பழம்பெரும் நடிகையான காலஞ்சென்ற ருக்மணிதேவி பிறந்ததாகக் கூறப்படும் பெரட்டாசி வைத்தியசாலைக்குச் சென்றதுடன், அங்கிருந்த ஆவணங்களில் ருக்மணிதேவியின் பிறப்புச் சான்றிதழும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.



தேவைக்கேற்ற கட்டடம் இன்மையால்

# எல்படை த.வி மாணவர்களின் கற்றலில் பாதிப்பு

எஸ்.சதீஸ்

எல்படை த.வி மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒழுங்கான கட்டட வசதி இன்மையால் நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

1931ஆம் ஆண்டு கட்டப்பட்ட எல்படை தமிழ் வித்தியாலயமானது, தற்பொழுது தரம் 11 வரை இயங்குகின்ற போதிலும் கட்டட வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றன.

மழைக்காலங்களில் பாடசாலையின் கூரைத்தகடுகள் ஊடாக மழைநீர் உட்புகுவதாகவும்,இதனால் கற்றல் உபகரணங்கள் முற்றாக நனையும் சம்பவங்களும் அவ்வப்போது பதிவாகி வருகின்றன.

இரண்டு கட்டடங்களை கொண்டுள்ள இப்பாடசாலையில் 425 மாணவர்கள் கல்வி கற்றும் வரும் நிலையில், ஒரு மண்டபத்தில் 08 வகுப்பறைகளில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

ஒரே மண்டபத்தில் கூடுதலான மாணவர்கள் கல்வி கற்பதால், மாணவர்கள் கற்பதிலும் ஆசிரியர்கள் கற்பிப்பதிலும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வெயில் காலங்களின் போது பாடசாலை வளாகத்தில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மரங்களில் பாரிய குளவி கூடுகள் காணப்படுகின்றமை அச்சுறுத்தலான விடயம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

இப்பிரச்சினைகள் தொடர்பாக மலையக அரசியல்வாதிகளிடம் பெற்றோர்கள் பலமுறை முறையிட்ட போதிலும் இதுவரையிலும் எவ்வித மாற்று நடவடிக்கைளை அவர்களால் மேற்கொள்ள வில்லை என பெற்றோர்கள் சுட்டி காட்டுகின்றனர்.

# ரொப்கில் தோட்ட வீதியை புனரமைத்து தரவும்

## தோட்ட மக்கள் கோரிக்கை

துவாரகஷான்

டின்சின் நகரத்தில் இருந்து சிங்காரவத்தை தோட்டத்தின் ஊடாக, ரொப்கில் தோட்டத்திற்கு செல்லும் ஆறு கிலோ மீற்றர் தூரம் கொண்ட பிரதான வீதியானது, பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாத காரணத்தால் மிகவும் மோசமடைந்த நிலையில் உள்ளது. குறித்த வீதியில் எந்தவொரு வாகனங்களும் செல்ல முடியாத நிலை காணப்படுவதால், மாணவர்கள் உள்ளிட்டவர்கள் பாரிய சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

பாதை சீர்கேட்டால் குழந்தை ஒன்றும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்த சம்பவமும் இங்கு பதிவாகியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தொழிலாளர்களுக்கு மானிய விலையில்

# உணவுப்பொருட்களை பெற்றுக்கொடுக்க வேண்டும்

எஸ்.கே. குமார்

உணவு பொருட்களின் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் உணவு பொருட்களையும் மண்ணெண்ணெயும் பெற்றுக்கொடுக்க மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஐக்கிய மலையக மாமன்றத்தின் தலைவர் ஏ. பீ. சுரேஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்துள்ள அவர்,

இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினையில் மலையக பெருந்தோட்ட மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் இருந்து மீளவேண்டுமானால் மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தங்களது தொழிற்சங்க அரசியல் பேதங்களை மறந்து ஒன்றுபட்டு, மலையக பெருந்தோட்ட சமூக விடுதலைக்காக குரல் எழுப்ப வேண்டும்.

தொழிலாளர்கள் தங்களது வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் தேயிலை தோட்ட தொழிற்றுறைகள் இன்று முடக்கப்பட்டுவருகின்றன. எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறோம் எனச் சிந்தித்து மன நோயாளிகளாக மாறும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

போதைப் பொருட்களுடன்

# நுவரெலியாவுக்குச் சென்ற நால்வர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

போதைப் பொருட்களுடன் நுவரெலியாவுக்கு சுற்றுலாச் சென்ற நான்கு இளைஞர்களும் சட்டவிரோதமாக வல்லப்பட்டையைக் கொண்டு சென்ற மற்றுமொரு நபரும் கைதுசெய்ய ப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (4) மாலை ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேனை, களுகல பொலிஸ் காவலரண் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே, சந்தேகநபர்கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொல்பிட்டிய



பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஜி. ரஞ்சன் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட 4 சந்தேகநபர்களிடமிருந்து கேளா கஞ்சா, போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டு உள்ளதுடன், இவர்கள் மேலும் சிலருடன் தனியார் பஸ்ஸொன்றில் நுவரெலியாவுக்குச் சுற்றுலா சென்றவர்கள் என தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேகநபர்கள் நால்வரும் 20- 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன், இவர்கள் அவிசாவளை, கிரிந்திவெல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கினிகத்தேனை பகுதியிலிருந்து தெரணியகல பகுதிக்கு அனுமதியின்றி 2 கிலோ 3 கிராம் வல்லப்பட்டையைக் கொண்டு சென்ற நபர் ஒருவரும் இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் ஐவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாக பொல்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின்

# நுவரெலியா பிரதேசத்துக்கான நிர்வாகக் குழு தெரிவு

சுஜிதா

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் நுவரெலியா பிரதேசத்துக்கான பொதுக் கூட்டம், நேற்று முன்தினம் (04) தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் நுவரெலியா மாவட்ட தலைவர் ஜெகதீஸ்வரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இதன் போது, செஞ்சிலுவை சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான தெளிவூட்டல் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், நுவரெலியா பிரதேசத்திற்கான நிர்வாகக் குழு உறுப்பினர்களின் தெரிவு நடைபெற்றது.

இதன்போது, நுவரெலியா மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளை மையமாகக் கொண்டு 5 பிரதேச குழுக்களுக்கான நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ட்ரெக்டர் கவிழ்ந்ததில் நால்வர் வைத்தியசாலையில்

துவாரகஷான்

அக்கரப்பத்தனை, டொரிங்டன் தோட்டத்தில் உரம் ஏற்றிச் சென்ற ட்ரெட்டர் கவிழ்ந்ததில் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டொரிங்டன் தேயிலை தொழிற்சாலையிலிருந்து கல்மதுரை பிரிவுக்கு உரம் ஏற்றிச் சென்ற ட்ரெக்டர், பாலத்தை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று ( 05 ) காலை 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# தீவிரமாக பரவும் வைரஸ்களும் மருந்துகளுக்கான தட்டுப்பாடும்

நாட்டில் தீவிரமாக பரவிக்கொண்டிருக்கும் வைரஸ்களால் பலரும் பாதிக்கப்பட்டு, பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். கொரோனாவுக்குப் பின்னர், ஒரே நேரத்தில் நாட்டின் பல பாகங்களிலும் வைரஸ்கள் பரவிக்கொண்டிருக்கின்றன.

இந்த வைரஸ்களால் பெரும்பாலும் சிறுவர்களே கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். நாளொன்றுக்கு 60க்கும் 70க்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலான சிறுவர்கள், பாதிக்கப்படு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர் என தேசிய தொற்றுநோய்கள் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காய்ச்சல் உட்பட, இன்புளுவன்சா, டெங்கு, கொவிட் உள்ளிட்டவையும் அவற்றில் அடங்குகின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ள அதிகாரிகள், கொரோனா வைரஸ் தொற்றுக்காலத்தில் அதிலிருந்து பாதுகாப்பதற்காக, கடைப்பிடித்த சுகாதார கட்டுப்பாடுகளை அவ்வாறே கடைப்பிடிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

கொவிட்-19 தொற்றின் தாயகமென அறியப்பட்ட சீனா, கடந்த மூன்று ஆண்டுகளாக கொரோனா தாக்கத்துக்கு கடுமையாக முகங்கொடுத்துக்கொண்டே வருகின்றது. அண்மைய நாள்களில், அதன் வீரியம் அதிகரித்துள்ளது. அங்கு தீவிர கொரோனா கட்டுப்பாடுகள், ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு கடுமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கட்டுப்பாடுகளுக்கு எதிராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர். இந்நிலையில், கட்டுப்பாடுகளை நீக்கினால், சுமார் 20 இலட்சம் பேர் வரையிலும் உயிரிழக்க நேரிடுமென சீன மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர் என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த எச்சரிக்கையை அந்நாட்டுக்கு மட்டுமானதாக நினைத்துவிடக்கூடாது.

இவ்வாறான நிலையில், நமது நாட்டில் ஒருபக்கம் வைரஸ்கள் பல ஏககாலத்தில் பரவிக்கொண்டிருக்கும் நிலையில், மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு கடுமையாக நிலவுகின்றமையால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்க வைத்தியசாலைகள் சிலவற்றில், எந்தவொரு நோய்க்கும் சாதாரண வலிநிவாரணி குளிசைகளே வழங்கப்படுகின்றன.

இலங்கையை பொறுத்தவரையில், 30 இலட்சம் பேர் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 10 இலட்சம் பேர் தடுக்கக்கூடிய பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 10 ஆயிரம் பேர் இதய சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ள பட்டியலில் உள்ளனர் என்றும் அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

பல வகையான தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களில் தினமும் 30 இலட்சம் பேர் மருந்துகளை உட்கொள்கின்றனர். மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக அவ்வாறானவர்கள் முறையாக மருந்துகளை உட்கொள்வதில்லை. நபரொருவருக்கு நாளொன்றுக்கு தேவையான குளிசைகளில் சரிபாதியை மட்டுமே விநியோகிக்கக்கூடியதாக உள்ளது. அந்தளவுக்கு நாட்டின் மருத்துவத்துறை உக்கிரமான வீழ்ச்சியை கண்டுக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில், 10 ஆயிரம் வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் மருத்துவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நோய்களால் பீடிக்கப்படுவதில் இருந்து தற்காத்துக்கொள்ள வேண்டுமாயின், நோயெதிர்ப்பு சக்தி உடலில் அதிகரிக்கவேண்டும். அதற்கு போஷாக்கான உணவுகளை எடுத்துக்கொள்ளவேண்டும். பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் அவையெல்லாம் சாத்தியப்படாது.

என்றாலும் தொற்றா நோய்களில் பீடித்துக்கொள்ளாமல் தற்பாதுகாத்துக்கொள்ளவேண்டும். தொற்று நோய்கள் குறித்து அவதானமாகவே இருக்க வேண்டும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பொருளைத் தேடுவதைவிட, அருளைத் தேடுவது மேலானது. கருணை உள்ளவர்களுக்கு எல்லாமே கிட்டும். தனது வருமானத்தை ஈகை செய்பவர்களுக்கு இறைவனின் அருள் கிட்டுவதால், அவர்களுக்கு 'இல்லை' எனும் வார்த்தையே வராது.

வாழும் காலம் உயிரோட்டமாக இருக்க வேண்டும். உறக்கத்தில் வாழமுடியாது. விழிப்புநிலை அகவாழ்வைத் தூய்மையாக்குகின்றது.

சந்தோச சாகரத்துடன் வாழ, ஈகையும் பிரதானமானது. உலகை விழித்துப் பாருங்கள்; மக்கள் நிலைபுரியும்.

யாவரும் சின்ன உதவியையேனும் சமூகத்துக்கு அளித்தாலேயே அதன்மூலம் பலர் வளர்ச்சியை அடையமுடியும். தனி மனிதர் பலர் இணைந்தால், அதுவே பலம்; அதுவே நலன்களைப் பெருக்குகின்றது.

இந்த வாழ்க்கையே நிஜமானது. இன்றே உடன் பணிசெய்க!

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

அறிவிலிச் சமூகத்தை உருவாக்க

# ஆயுதமாகின்றதா போதை?

**மொஹமட் பாதுஷா**

'ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞன் தற்கொலை', 'போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞன் குழந்தையை மேல் மாடியில் இருந்து வீசினான்', 'போதைப் பொருள் பாவனைக்கு பணம் இல்லாத காரணத்தால் தனது உடற்பாகங்களை விற்பனை செய்வதற்கு இளைஞன் முயற்சி', 'போதைப் பாவனை மாணவர்களிடையே அதிகரிப்பு'... எனத் தினந்தோறும் வரும் செய்திகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இவை வெறும் செய்திகள் அல்ல என்பதை, போதை மயக்கத்தில் இல்லாத ஏனைய மக்கள் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இல்லாவிட்டால், இன்னும் ஐந்து வருடங்களுக்குள், ஒவ்வொரு வீட்டிலும் இந்தச் செய்தி உருவாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நமது அனுபவத்தின்படி, ஒரு குறிப்பிட்ட காலம் வரை, ஓர் ஊரில் மது அல்லது புகைத்தல் பழக்கம் கொண்டவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். யார் புகைத்தல் பழக்கம் உள்ளவர்கள் என்பதையும் யார் போதைப் பொருட்கள் பயன்படுத்துகின்றவர்கள் என்பதையும் சமூகம் அறிந்து வைத்திருந்தது. மிக முக்கியமாக, இதனை சில்லறையாக விற்பனை செய்த யாரும் சமூகத்தில் மதிக்கப்பட்டது கிடையாது. அவற்றை விற்பனை செய்கின்ற நடுநிலை வியாபாரிகள் பெரும் பணக்காரர் ஆனதும் இல்லை. ஆனால், இதுவெல்லாம் இப்போது தலைகீழாக மாறிவிட்டது.

இலங்கை முழுவதும் இப்போது நவீன ரக போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளது. அதனது வியாபாரச் சந்தை எல்லா சந்து பொந்துகளுக்குள்ளும் வியாபித்துள்ளது. இதற்குப் பின்னால் பெரிய புள்ளிகளும் அதிகாரிகளும் இல்லாமல் இதனைச் செய்ய முடியாது.

குறிப்பாக, பாதுகாப்பு கெடுபிடிகளும் ஏகப்பட்ட சோதனைச் சாவடிகளும் நிறைந்துள்ள பிராந்தியங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹெரோயின், ஐஸ் போன்ற போதைப் பொருட்களின் விற்பனை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இளைஞர்கள், சிறுவர்களிடையே வெகுவாக ஊடுருவியுள்ளது. பல பாடசாலை மாணவர்கள் போதை வில்லைகள், டொபி வகைகளை பாவிக்கின்றனர்.

ஆண்கள் மட்டுந்தான் இதனைப் பயன்படுத்துகிறார்கள் என்ற காலம் மலையேறிப் போய்விட்டது. நவீன தொடர்பாடல் வழிமுறைகள் நிறைந்த இக்காலத்தில், பெண் பிள்ளைகளும் இதனால் சீரழியும் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை மறைப்பதால் தீர்வு காணலாம் என சிலர் முட்டாள்தனமாக கருதுகின்றனர்.

போதைப்பொருள் வியாபாரமும் பாவனையும், முதலாவதாக, பெரும் சமூகச் சீரழிவுக்கு காரணமாகியுள்ளது. பாலியல் வன்முறைகள், கொலைகள், தற்கொலைகள் போன்றவற்றுக்கு வித்திட்டுள்ளன. இதற்கப்பால், எதிர்கால இளைஞர்களை புத்திகெட்டவர்களாக, மந்தபுத்தி உள்ளவர்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றது. இங்குதான் ஒரு சந்தேகம் எழுகின்றது.

பொதுவாக, இலங்கை முழுவதும் போதை வியாபாரம் அதிகரித்துள்ளது என்றாலும் குறிப்பாக வடக்கு, கிழக்கின் முஸ்லிம் மற்றும் தமிழ் பகுதிகளிலேயே அளவுக்கதிகமாக ஆக்கிரமித்துள்ளது. எனவே, சிறுபான்மைச் சமூக இளைஞர்களை சிந்திக்க முடியாத, சமூகத்துக்காகப் போராட முடியாத, அறிவிலிகளாக, பேதைகளாக மாற்றுவதற்கான ஒரு கருவியாக, இது பயன்படுத்தப்படுகின்றதா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

இதற்கு நல்ல உதாரணம் இஸ்ரேலின் அணுகுமுறையாகும். உலகில் ஆபத்தான கார்ட்டூன்கள் மற்றும் வீடியோ கேம் ரக விளையாட்டுகளை இஸ்ரேல் நிறுவனங்கள்தான் அதிகளவில் தயாரிக்கின்றன. இதில் அநேகமான விளையாட்டுகளை இஸ்ரேல் நாட்டுச் சிறுவர்கள் பயன்படுத்த முடியாது தடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், உலகெங்கும் பில்லியன் கணக்கான சிறுவர்கள், இளைஞர்கள் வீடியோ விளையாட்டுகளுக்கு அடிமையாகி இருக்கின்றனர். வீடியோ விளையாட்டுகளால் ஆயிரக்கணக்கான மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனையெல்லாம் தாண்டி, இது மில்லியன் டொலர் வியாபாரமாகியுள்ளது.

மிக முக்கியமாக, வீடியோ விளையாட்டுகளை பயன்படுத்துகின்ற இளைஞர்களில் முக்கால்வாசிப்பேர், மந்த புத்தி உள்ளவர்களாக மாறியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவர்கள் சுயமாக சிந்திக்கும் ஆற்றலை இழந்து, இலத்திரனியல் கருவிகளின் ஏவல்களுக்குள் கட்டுண்டு கிடக்கின்றனர்.

இதே மாதிரியான உத்திதான் இலங்கையிலும் கையாளப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. அதாவது, இதைவிட மோசமான விளைவுகளை போதைப்பொருட்கள் இளைஞர்களில் ஏற்படுத்துகின்றன. எனவே, இலங்கையில் பொதுவாக துடிப்புள்ள அனைத்து இனங்களையும் சேர்ந்த இளைஞர்கள், குறிப்பாக சிறுபான்மை இளைஞர்களின் அறிவை மழுங்கடிக்கச் செய்து, அவர்களை ஒரு வட்டத்திற்குள்ளேயே முடக்குவதற்கான ஒரு கருவியாக, நவீன போதைப் பொருட்களின் ஊடுருவலுக்கு இடமளிக்கப்பட்டுள்ளதா என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது.

தமிழ் அரசியல்வாதிகள் இந்தச் சந்தேகத்தை வெளிப்படையாகவே பேசத் தொடங்கி விட்டனர். ஆனால், வழக்கம் போல முஸ்லிம் அரசியல்வாதிகளான 'நீரோ'க்கள், சமூகம் போதையால் எரிந்து கொண்டிருக்கின்ற காலத்திலும் இன்னும் 'பிடில்' வாசித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இன்னும் அரசியல் அதிகார போதையும், 'அப்படி இருக்காது' என்ற மாயையும் தெளியவில்லை என்று கூறலாம்.

தினமும் போதைப் பொருட்களால் ஏற்படும் சமூகச் சீரழிவுகள், மரணங்களைக் கேள்விப் பட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். கைதுகள், போதைப் பொருள் கைப்பற்றல்கள் இடம்பெற்றாலும், இதன் பரவல் குறைந்தபாடில்லை. அவ் வியாபாரம் துரிதகெதியில் பரவி வருகின்றமையானது, பிரதான விற்பனையாளர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லையா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது?

இலங்கையில் நடக்கின்ற 95 சதவீதமான குற்றங்களுக்கு அரசியல்வாதிகள் அல்லது துறைசார்ந்த அதிகாரிகளின் மறைமுக ஒத்துழைப்பு இருக்கின்றது. பெரிய பணமுதலைகள் மட்டுமன்றி இலாபம் உழைத்தால் போதும் எனக் கருகின்ற யாரும் இதில் முதலீடு செய்திருக்கலாம். முஸ்லிம், தமிழ் பிரதேசங்களில் உள்ள பல புதுப் பணக்காரர்கள் இதில் மறைமுகமாக முதலீடு செய்துள்ளதாக மக்களிடையே பேச்சடிபடுகின்றது.

போதைப் பொருளை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையான சட்டத்தை கையில் வைத்திருக்கின்றது. கணிசமான அதிகாரிகள் இதனை கட்டுப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால், சில பொலிஸாருக்கும் அதிகாரிகளுக்கும் இந்தப் போதை வியாபாரிகளுடன் அல்லது அவர்களை ஆசீர்வதிக்கும் அரசியல்வாதிகளுடன் தொடர்பிருப்பதாக அவர்களது செயற்பாடுகளில் இருந்து உணர முடிவதாக மக்கள் விமர்சிக்கின்றனர். அத்துடன் இவர்களுக்காக ஆஜராகும் சட்டத்தரணிகளையும் சபிக்கின்றனர்.

கையும் களவுமாக பிடிக்கப்படும் கஞ்சா எப்படி காணாமல் போகின்றது? ஹெரோயினின் கிராம் அளவு எவ்வாறு குறைகின்றது? பெருமளவு போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டவர், சில நாள்களில் எவ்வாறு வெளியில் வருகின்றார் என்பதெல்லாம் மக்கள் மனங்களில் உள்ள விடைதெரியாத கேள்விகளாகும்.

போதை வியாரிகள் தப்பிக்கின்ற விவகாரத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி பிரதான பொறுப்பை அரசாங்கம் சுமந்துள்ளது. ஆனால், கஞ்சாவையும் விபசாரத்தையும் சட்ட ரீதியாக்க முனைகின்ற அரசியல்வாதிகளையும் போதை வியாபாரிகளுடன் தொடர்பைப் பேணக்கூடிய அதிகாரத் தரப்பினரையும் தமக்குள் வைத்துக் கொண்டு, ஹெரோயின் மற்றும் ஐஸ் பாவனையை கட்டுப்படுத்த முடியுமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

கடந்த காலங்களில் அரசாங்கங்கள், போதை வஸ்துகளை தடை செய்வதற்கான நடவடிக்கைகள் நடைமுறைச் சாத்தியம் அற்றது என்ற படியால் 'இது ஆபத்தானது' என்று சொன்னால் மட்டும் அதனைத் தடுத்து விடலாம் என்ற பாங்கிலேயே செயற்பட்டன.

'சிகரட் பாவிப்பது புற்றுநோயை உண்டாக்கும்' என்ற வசனம் இதற்கு நல்ல உதாரணமாகும். இதனால் இவற்றின் பயன்பாட்டை கட்டுப்படுத்த முடியாமல் போனது என்பதே உண்மையாகும். ஆனால், ஆபத்தான போதைப் பொருட்கள் விடயத்தில் இதனையெல்லாம் தாண்டி அரசாங்கமும் அதிகாரிகளும் பொறுப்புடன் விரைந்து தீவிரமாகச் செயற்பட வேண்டியுள்ளது.

கொள்கை வகுத்தல், கருத்தரங்கு நடத்துதல் என்ற விடயங்களுக்கு அப்பால் சென்று, களத்தில் இறங்கி போதைப் பொருள் வர்த்தகம், பயன்பாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தேவையேற்பட்டால் அரசியல்வாதிகள், அரச உத்தியோகத்தர்கள், சமூகத் தலைவர்கள், பெரும் புள்ளிகளுக்கு எதிராகவும் சட்டம் பாய வேண்டும்.

இதற்கு மூவின மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பள்ளிவாசல்கள், கோவில்கள், தேவாலயங்கள், விகாரைகள் வெறுமனே போதனையை மட்டும் நடத்திக் கொண்டிருக்காமல், 'போதை' என்பது நமது இளைஞர்களின் அறிவையும், துடிப்பையும், உயிரோட்டத்தையும் இல்லாதொழிப்பதற்கான அணுவாயுதத்தைப் போன்றது என்று கருதிச் செயற்பட வேண்டும்.

இது விடயத்தில், அரசாங்கமும் பாதுகாப்பு தரப்பினரும் உண்மையாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்காமல், என்ன நடந்தால் நமக்கு என்ன என்று இருப்பீர்கள் என்றால், ஒவ்வொரு வீட்டிலும் போதை என்ற இந்த அணுகுண்டு வெடிக்கலாம். அதன் அழிவுகள் ஹிரோசிமாவை விட நமது சமூகத்தில் நீண்டகால அழிவை ஏற்படுத்தும்.

## கடிதங்கள்

வவுணதீவு–வலையிறவு பாலத்தில்

### தெருவிளக்குகளை பொருத்துமாறு கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு மக்களின் பிரதான பாதையாக காணப்படும் வலையிறவு-வவுணதீவு பாலத்தில் தெருவிளக்கு, பாதுகாப்பு அரண்கள் பொருத்தப்பட்டு பொதுமக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு உயரதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென பொதுமக்கள், புத்திஜீவிகள் கோரிக்கை முன்வைக்கின்றார்கள். இப்பாலத்தின் ஊடாக தினமும் 25,000 மேற்பட்ட பொதுமக்கள் பயணிக்கின்றார்கள்.

மழைக் காலங்களில், வெள்ளம் பாலத்தின் மேலாகப் பாய்வதால் பொதுமக்கள் துர்ப்பாக்கிய நிலையில் பயணிக்கின்றார்கள். போக்குவரத்து மிகவும் மோசமாக காணப்பட்டாலும், வேறு பாதை இல்லாததால் இப்பாதையையே மாணவர்கள், பொதுமக்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பாதசாரிகள் பயன்படுத்துகின்றனர்.

தற்போது, மின்விளக்குகள் பொருத்தப்படாது, இப்பாலமானது இருட்டாகிக் காணப்படுகின்றது. கரணம் தப்பினால் மரணம் என்பது போலவே, இரவு வேளையில் இம்மக்கள் இப்பாலத்தின் ஊடாக போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். இப்பாலத்தை மட்டு. மாநகர சபை கவனிக்காமல் இருப்பது மிகுந்த வேதனையாகவே உள்ளது.


இப்பகுதி மக்களின் பிரதான தொழிலான மீன்பிடி, விவசாயம் போன்றவற்றின் உற்பத்திகளை நகர்புறம் நோக்கி விற்பனைக்காக கொண்டு செல்வதற்கு சைக்கிளையே அதிகளவில் பயன்படுத்துகின்றமையால், இவ்வீதியில் தெருவிளக்கு பொருத்தப்படாததால் முதலைகள், ஆமைகள் படுத்துறங்குவதால் விபத்துக்குள்ளாகின்றார்கள்.

இப்பகுதி மாணவர்கள் மேலதிக வகுப்புகளுக்காக மட்டக்களப்புக்கு நகருக்கு சென்று, மாலைப்பொழுதிலே வீடு திரும்புகின்றார்கள். இவ்வீதியில் தெருவிளக்கு இல்லாததால் வீதியில் பயணிப்போர் இருளில் பயணிக்கின்றார்கள்.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு, மட்டக்களப்பு மாநகர சபை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பொதுமக்கள், கோரிக்கை விடுகின்றார்கள்.

க. விஜயரெத்தினம்

# மஞ்சள் தேவதை



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையாக இருந்த அமலாபால் நடிப்பில் அண்மையில் வெளியான 'கேடாவர்' என்ற திரைப்படம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. தற்போது அவர் மம்முட்டியுடன் 'கிரிஸ்டோபர்' என்ற படத்தில் நடித்து உள்ளார்.

அமலாபால் சமூக வலைதளங்களில் குறிப்பாக இன்ஸ்டாகிராமில் ஆக்டிவ்வாக இருப்பார். மேலும் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் விதவிதமான புகைப்படங்களை பதிவு செய்து வருகின்றார்.

இந்த நிலையில் அவர் மஞ்சள் நிறத்தில் தகதகவென ஜொலிக்கும் ஆடையில் உள்ள புகைப்படங்களை வெளியிட்டுள்ளார். இந்தப் புகைப்படங்களுக்கு இரசிகர்களின் விருப்பு வாக்குகள் குவிந்து வருகின்றன.

நடிகை அமலா பால் 'அதோ அந்தப் பறவை போல' என்ற தமிழ்ப் படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்தப் படம் விரைவில் வெளியாக உள்ள நிலையில் அவர் தற்போது ஹிந்தி, மலையாள படங்களிலும் நடித்து வருகிறார்.



# 'வரலாறு முக்கியம்'

நடிகர் ஜீவா நடித்துள்ள 'வரலாறு முக்கியம்' என்ற திரைப்படம் வெள்ளிக்கிழமை (09) வெளியாக இருக்கும் நிலையில் இந்தப் படத்தின் புரமோஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் 'வரலாறு முக்கியம்' படத்தின் புரமோஷன் நிகழ்ச்சியில் பேசிய நடிகர் ஜீவா, "தமிழ் இரசிகர்கள் நல்ல படத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கு மிகச் சிறந்த உதாரணம் 'லவ் டுடே' படம். 'லவ் டுடே' படத்தைப் போலவே, 'வரலாறு முக்கியம்' படமும் நகைச்சுவை கதையில் உருவாக்கப்பட்டுள்ளது" என்றார்.

மேலும், 'சிவா மனசுல சக்தி' போன்ற ஒரு படத்தில் நடிக்க வேண்டும் என இரசிகர்கள் கேட்டுக்கொண்ட நிலையில்தான் 'வரலாறு முக்கியம்' படத்தின் கதையை கேட்டேன். 'சிவா மனசுல சக்தி' படம் போன்று இந்தப் படம் இருக்கும் என்றார்.

# 'ரகு தாத்தா'

'கேஜிஎப்', 'கேஜிஎப் 2', 'காந்தாரா' உள்பட பல வெற்றிப்படங்களை தயாரித்த ஹோம்பாலே பிலிம்ஸ் நிறுவனத்தின் அடுத்த படத்தில் கீர்த்தி சுரேஷ் முக்கிய வேடத்தில் நடிக்க இருப்பதாகவும் இந்தப் படத்தில் எம்எஸ் பாஸ்கர் உள்ளிட்ட பலர் நடிக்க இருப்பதாகவும் அண்மையில் அறிவிக்கப்பட்டது.




இந்த நிலையில், இந்தப் படத்தின் டைட்டில் 'ரகு தாத்தா' என வைக்கப்பட்டு உள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து படக்குழுவினர் வெளியிட்டுள்ள போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது.

இந்தப் படத்தை சுமன் குமார் என்பவர் இயக்குகிறார் என்றும் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாகவும் விரைவில் படப்பிடிப்பு முடியும் என்றும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே நடிகை கீர்த்தி சுரேஷ் 'மாமன்னன்', 'போலா சங்கர்,' 'தசரா', 'சைரன்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.




# வேற லெவலில் நடிகை!

அஜித் நடித்த 'உன்னை தேடி' என்ற திரைப்படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானவர் மாளவிகா. அதன் பின்னர் அவர், 'ஆனந்த பூங்காற்றே', 'ரோஜாவனம்' 'வெற்றிக்கொடிகட்டு' உள்பட பல படங்களில் நடித்தார்.

நடிகை மாளவிகா சமூக வலைத்தளத்தில் குறிப்பாக இன்ஸ்டாகிராமில் ஆக்டிவ்வாக இருக்கிறார். இந்த நிலையில் அண்மையில் அவர் வேற லெவலில் உடற்பயிற்சி செய்யும் புகைப்படங்கள் மற்றும் வீடியோவை தனது இன்ஸ்டாவில் வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோ தற்போது இணையதளங்களில் வைரலாகி வருவதோடு, லைக்ஸ், கமெண்ட்ஸ் குவிந்து வருகின்றன.





# 'வணங்கான்' படத்தில் மீண்டும் திருப்பம்

சூர்யா நடிப்பில் பாலா இயக்கத்தில் 2டி நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகி வந்த 'வணங்கான்' திரைப்படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த நிலையில் திடீரென இயக்குநர் பாலா இந்தப் படத்திலிருந்து சூர்யா விலகுவதாக அறிவித்து இருந்தார்.

இயக்குநர் பாலா வெளியிட்டுள்ள அறிவிப்பில், "என் தம்பி சூர்யாவுடன் இணைந்து 'வணங்கான்' என்ற புதிய திரைப்படத்தை இயக்க விரும்பினேன். ஆனால் கதையில் நிகழ்ந்த மாற்றங்களால், இந்தக் கதை சூர்யாவுக்கு உகந்ததாக இருக்குமோ என்ற ஐயம் தற்போது எனக்கு ஏற்பட்டுள்ளது.

என் மீதும், இந்தக் கதையின் மீதும் முழு நம்பிக்கையுடன் இருக்கிறார் சூர்யா. இவ்வளவு அன்பும் மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருக்கும் என் தம்பிக்கு ஓர் அண்ணனாக என்னால் ஒரு சிறு தர்மசங்கடம் கூட நேர்ந்துவிடக் கூடாது என்பது என் கடமையாகவும் இருக்கிறது.

எனவே 'வணங்கான்' படத்திலிருந்து சூர்யா விலகிக் கொள்வது என நாங்கள் இருவரும் கலந்து பேசி ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அதில் அவருக்கு மிகவும் வருத்தம் தான் என்றாலும் அவரது நலன் கருதி எடுத்த முடிவு இது.

'நந்தா'வில் நான் பார்த்த சூர்யா, பிதாமகன் - இல் நீங்கள் பார்த்த சூர்யா போல் வேறு ஒரு தருணத்தில் உறுதியாக இணைவோம். மற்றபடி 'வணங்கான்' பணிகள் தொடரும் என்று பாலா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பாலாவின் இந்த அறிக்கையை தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள 2D என்டர்டெயின்மென்ட் நிறுவனம், பாலாவின் உணர்வுகளுக்கும் முடிவுகளுக்கும் மதிப்பளித்து சூர்யா மற்றும் அவரது நிறுவனமும் 'வணங்கான்' இல் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளனர்.




குஜராத்

# சூடுபிடிக்கும் குஜராத் சட்டப் பேரவைத் தேர்தல்

## வாக்களித்தார் பிரதமர் மோடி



குஜராத் மாநிலத்தில் உள்ள 182 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு, இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் கடந்த 1ஆம் திகதி நடைபெற்ற முதற்கட்ட தேர்தலில் 89 தொகுதிகளிலில் இருந்து 63% வாக்குகள் பதிவாகின.

இதையடுத்து, 2ஆவது கட்டமாக வடக்கு மற்றும் மத்திய குஜராத்தில் உள்ள வதோதரா, காந்தி நகர், அகமதாபாத் உள்பட 14 மாவட்டங்களில் 93 தொகுதிகளில் நேற்று (05) வாக்குப்பதிவு நடைபெற்றது.

883 வேட்பாளர்கள் களத்தில் உள்ள நிலையில், இத்தேர்தலில் வாக்களிக்க 2.54 கோடி வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குஜராத் மாநிலத்தில் 92 தொகுதிகளை கைப்பற்றினால், ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மை கிடைத்து விடும் என்பதால், இத்தேர்தலானது மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடி அவரது தொகுதியான சபர்மதி பகுதியில் உள்ள ராணிப் வாக்குச்சாவடியில் நேற்று வாக்களித்திருந்தார்.

93 தொகுதிகளில் பதிவாகும் வாக்குகள் எதிர்வரும் 8ஆம் திகதி எண்ணப்படும் நிலையில், அன்று பிற்பகலுக்குள் குஜராத்தில் ஆட்சி அமைக்கப்போவது யார் என்பது தெரிந்துவிடும்.

அதேபோல், இமாச்சல பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளும் 8ஆம் திகதி எண்ணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உத்தர பிரதேசம்

# முத்தம் கொடுத்த மணமகன்; திருமணத்தை நிறுத்திய மணமகள்



மணமேடையில் வைத்து மணமகன் முத்தம் கொடுத்ததால், மணப் பெண் திருமணத்தை நிறுதிய விநோத சம்பவம் உத்திர பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த திருமணத்தில் 300க் கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர். இந்நிலையில் மணமேடையில் வைத்து, எதிர்பாராத விதமாக அனைவரது முன்னிலையிலும் மணமகன், மணமகளுக்கு முத்தம் கொடுத்துள்ளார்.

இதனால் கோபமடைந்த மணப்பெண், குறித்த திருமணத்தை நிறுத்தியுள்ளதோடு இது குறித்து பொலிஸ் நிலையத்திலும் புகார் அளித்துள்ளார்.

குறித்த புகாரில், 'தனது நண்பர்களிடம் பந்தயம் கட்டி, அதில் வெற்றிப் பெறுவதற்காக மணமகன் என்னை முத்தமிட்டார். இதனால் மணமகனின் நடத்தையில் எனக்கு சந்தேகம் இருக்கிறது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் தன்னைத் தகாத முறையில் அவர் தொட்டதாகவும், முதலில் அதைத் தான் பெரிது படுத்தவில்லை எனவும், பின்னர் அவர் முத்தம் கொடுத்தபோது, என்னை அவர் அவமதிப்பது போல உணர்ந்ததாகவும், எனது சுய மரியாதை குறித்து அவர் சற்றும் யோசிக்காமல், விருந்தாளிகள் முன்னிலையில் தன்னிடம் தகாத நோக்கத்துடன் நடந்துகொண்டார் என்றும் அந்த மணப்பெண் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பொலிஸார் அப் பெண்ணை சமாதானம் செய்ய முயற்சி செய்த போது, அவர் தன் முடிவை மாற்றிக்கொள்ளவில்லை.

இந்நிலையில், திருமண சடங்குகள் அனைத்தும் முடிந்துவிட்ட பின்னரே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதனால் அவர்கள் கணவன் மனைவியாகவே கருதப்படுகின்றனர். அவர்கள் இருவரும் சற்று அமைதியடைந்த பின்னர் அடுத்த கட்டத்தை பற்றி யோசிக்கவேண்டும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மும்பை

# வீட்டுக்குள் நுழைந்த மர்மக் கும்பலால் பெண் கூட்டுப் பாலியல் வன்புணர்வு



வீட்டில் தனிமையில் இருந்த 42 வயதான பெண்ணை மூன்று பேர் கொடூரமாகத் தாக்கி, கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்த சம்பவம், மும்பையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மும்பையில் குர்லா என்ற பகுதியில், கடந்த 30 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று குறித்த பெண் தனிமையில் வீட்டில் இருப்பதை அறிந்துகொண்ட மூவர், அண்பெண்ணின் அனுமதியின்றி அவரது வீட்டுக்குள் நுழைந்து, அவரை வலுக்கட்டாயமாக பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

இதன் போது குறித்த மூவரும் பெண்ணின் கைகள், மார்பு பகுதிகளில் கூர்மையான ஆயுதங்களால் தாக்கியுள்ளதோடு சிகரெட்டைக் கொண்டு தீக்காயத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.

அதேசமயம் மூவரில் ஒருவர் இச் சம்பவத்தை வீடியோ எடுத்துள்ளதோடு, "இதனைப் பொலிஸாரிடம் தெரிவித்தால் குறித்த வீடியோவை இணையத்தில் வெளியிட்டுவிடுவோம்" என மிரட்டிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து அப்பெண் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ள நிலையில், குறித்த மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

# அரசுக்கு எதிராக 'நாம் தமிழர் கட்சி' ஆர்ப்பாட்டம்

சென்னை, கீழ்ப்பாக்கம் அரச வைத்தியசாலைக்கு முன்பாக, 'நாம் தமிழர் கட்சி'யினர் நேற்றுமுன்தினம் (04) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த வைத்தியசாலையில் நிர்வாக சீர்கேடுகள் காணப்படுவதாகக் கூறியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்து நாம் தமிழர் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட தலைவர் அய்யனார் கருத்துத் தெரிவிக்கையில், "கீழ்ப்பாக்கம் அரச வைத்தியசாலையில் தினந்தோறும் நூற்றுக்கணக்கான ஏழை மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக வருகின்றனர்.

ஆனால், இங்கு நடக்கும் நிர்வாக சீர்கேடுகளால் நோயாளிகள் சரியான முறையில் கவனிக்கப்படுவதில்லை. மேலும் இவ்வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதால் இங்கு பணியாற்றுபவர்கள் மிகுந்த பணிச்சுமைக்கு உள்ளாகின்றனர்.

அதுமட்டுமல்லாது இங்கு பணிபுரியும் ஒப்பந்த ஊழியர்கள், நோயாளிகளிடம் கட்டாய பண வசூலில் ஈடுபடுகின்றனர். நோயாளிகளை கவனிக்க வரும் உறவினர்களுக்கு வைத்தியசாலையில் தங்குமிடம் மற்றும் கழிப்பறை வசதிகள் இல்லை.

இப்பிரச்சினைகளுக்கு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.



சோலாப்பூர்

# இரட்டை சகோதரிகளை ஒரே நேரத்தில் திருமணம் செய்த நபர்



நபர் ஒருவர், ஒரே நேரத்தில் இரட்டைச் சகோதரிகளைத் திருமணம் செய்துகொண்ட சம்பவம், சோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள அக்லுஜ் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

பிங்கி, ரிங்கி என்ற இரட்டைச் சகோதரிகள் மும்பையில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்துள்ளனர். சகோதரிகள் இருவரும் சிறுவயதில் இருந்தே ஒன்றாக வாழ்ந்து வந்ததால், ஒரே நபரையே திருமணம் செய்ய முடிவு செய்திருந்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், இருவரும் அப்பகுதியைச் சேர்ந்த அதுல் என்பவரைக் காதலித்து வந்துள்ளனர். அதேசமயம் சகோதரிகளின் முடிவுக்கு குறித்த நபரும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சகோதரிகள் இருவரும் பெற்றோர்களின் சம்மதத்துடன் குறித்த நபரைத் திருமணம் செய்து கொண்டனர்.

பிரித்தானியா




# பிரித்தானியாவில் குறைவடையும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை

பிரித்தானியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்கப்படுகிறது. அந்த வகையில், 2021ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் விவரம் அண்மையில் வெளியானது.

அதன்படி, பிரித்தானியாவில் முஸ்லிம்களின் மக்கள்தொகை அதிகரித்து வருவது தெரியவந்துள்ளது.

அதேபோல வரலாற்றில் முதல் முறையாக அந்நாட்டின் அதிகாரப்பூர்வ மதமான கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்திற்கும் கீழே குறைந்துள்ளது.


பிரித்தானியாவின் தேசிய புள்ளியியல் அலுவலகம் (ONS) வெளியிட்ட தரவுகளின்படி, பிரித்தானியா மற்றும் வேல்ஸின் மக்கள் தொகையில் சுமார் 46.2 சதவீதம் பேர் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுவதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் இது 59.3 சதவீதமாக இருந்த நிலையில், தற்போது 46.2 சதவீதமாக குறைந்துள்ளது.

இதே காலகட்டத்தில் முஸ்லிம்களின் மக்கள் தொகை 4.9 சதவீதத்தில் இருந்து 6.5 சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும், இந்து மதத்தை பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை 1.5 சதவீதத்தில் இருந்து 1.7 சதவீதமாக அதிகரித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவத்திற்கு அடுத்தபடியாக, மதச்சார்பற்றவர்கள் அங்கு அதிகம் இருக்கின்றனர் என்பதும் சமீபத்திய புள்ளி விவரங்களின் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரான்ஸ்




## பிரபல எழுத்தாளர் டொமினிக் லேபியர் காலமானார்

'இஸ் பாரிஸ் பர்னிங்?' ( Is Paris Burning?) என்ற புத்தகத்தை எழுதிய உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் டொமினிக் லேபியர் தனது 91 ஆவது வயதில் உடல் நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் (04) உயிரிழந்துள்ளார்.

டொமினிக் லேபியர் அமெரிக்க எழுத்தாளர் லாரி காலின்ஸுடன் இணைந்து ஆறு புத்தகங்களை எழுதியுள்ள நிலையில், குறித்த புத்தகங்கள் அனைத்தும் 50 மில்லியன் பிரதிகளைத் தாண்டி விற்பனையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லது கொல்கத்தாவில் ஒரு ரிக்சாக்காரர் வாழ்க்கையில் படும் கஷ்டங்களைப் பற்றி'City of Joy' என்ற பெயரில் 1985 ஆம் ஆண்டு டொமினிக் லேபியர் வெளியிட்ட நாவலாது மக்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பை பெற்றிருந்ததோடு, அந்நாவலைத் தழுவி 1992 ஆம் ஆண்டு திரைப்படமொன்றும் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசியா



## வெடித்துச் சிதறிய எரிமலை: 2,000 க்கும் மேற்பட்டோர் வெளியேற்றம்

இந்தோனேசியாவின், கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள லுமாஜாங் நகரில் அந்நாட்டின் மிகப்பெரிய எரிமலையான 'செமேரு' உள்ளது.

சுமார் 12,000 அடி உயரம் கொண்ட இம் மலையானது கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெடித்து சிதறியது.

இதன் காரணமாக குறித்த எரிமலையிலிருந்து நெருப்புப் குழும்பு வெளியேறத் தொடங்கியுள்ளதோடு 5,000 அடி உயரத்துக்கு சாம்பல்புகையும் மேலே எழும்பியுள்ளது. இதனால் அப்பகுதியில் வாழும் 2,000 க்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் நாளுக்கு நாள் குறித்த எரிமலையின் ஆக்ரோஷம் அதிகரித்து வருவதாகவும் இதனால் மேலும் பல இடங்களுக்கு சாம்பல் புகை பரவும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் செமேரு எரிமலை வெடித்து சிதறியதில் 51 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்கா



## மனித மூளையில் 'சிப்' எலோன் அதிரடி

உலக செல்வந்தர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவரான எலோன் மஸ்க் குறித்து அதிரடித் தகவலொன்று வெளியாகியுள்ளது.

எலோன் மஸ்க் கார் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்துள்ளதைப் போன்று, மனித மூளையினை கணினியின் மூலம் இயக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளார் என ஏற்கெனவே தகவல்கள் வெளியாகிருந்தன.

இந்நிலையில், இதை உறுதிப்படுத்தும் வகையில், மனித மூளைக்குள் சிப்(Chip) ஒன்றைப் பொருத்தி அதன் மூலம், மனதில் நினைப்பதை கணினி மூலம் செயற்படுத்தும் திட்டத்தை எலோன் மஸ்க் விரைவில் தொடங்கியுள்ளார்.

சீனா


## உற்பத்தியை நிறுத்தும் அப்பிள் நிறுவனம்

சீனாவில் கடந்த சில வாரங்களாகக் கொரோனா தொற்று பரவலானது அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக சீனாவின் பல பகுதிகளிலும் கடுமையான ஊரடங்குக் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறு இருப்பினும் கடந்த சில நாள்களாக கொரோனாக் கட்டுப்பாடுகளுக்கு எதிராக மக்கள் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கொரோனா கட்டுப்பாடுகளால் சீனாவில் ஐபோன் உற்பத்தி குறைந்துள்ளதாகவும், இதனால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அப்பிள் நிறுவனமானது, சீனாவில் தனது உற்பத்தியை முற்றுமுழுதாக



நிறுத்தவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து வரும் 2025 ஆம் ஆண்டுக்குள் ஐபேட், மேக், அப்பிள் வொட்ச், ஏர்போர்ட்ஸ் போன்ற மொத்த அப்பிள் தயாரிப்புகளில் 25 சதவீதத்தை சீனாவிற்கு வெளியே பிற ஆசிய நாடுகளில் தயாரிக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அப்பிள் நிறுவனமானது, இந்தியா மற்றும் வியட்நாமில் தன்னுடைய வணிகத்தை அமைப்பதற்குத் திட்டமிட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




உலகக் கிண்ணம்:

# போலந்தை வீழ்த்தி காலிறுதியில் பிரான்ஸ்

### செனகலை வென்று காலிறுதியில் இங்கிலாந்து

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போலந்து உடனான இறுதி 16 அணிகளுக்கு இடையிலான சுற்றுப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்ற நடப்புச் சம்பியன்களான பிரான்ஸ், காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பிரான்ஸ் சார்பாக, கிலியான் மப்பே இரண்டு கோல்களையும், ஒலிவியர் ஜிரூட் ஒரு கோலையும் பெற்றதோடு, போலந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை றொபேர்ட் லெவன்டோஸ்கி பெற்றிருந்தார்.

இதேவேளை, நேற்று அதிகாலை நடைபெற்ற செனகலுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்ற இங்கிலாந்தும் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இங்கிலாது சார்பாக, ஜோர்டான் ஹென்டர்சன், அணித்தலைவர் ஹரி கேன், புகாயோ ஸாகா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் மொரோக்கோவும் ஸ்பெய்னும் மோதவுள்ளதுடன், நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் சுவிற்ஸர்லாந்தும், போர்த்துக்கல்லும் மோதவுள்ளன.

## இலங்கை ஸெபக்தக்ரோ அணியில் இரட்டைச் சகோதரிகள்

■ எம்.யூ.எம். சனூண்

இலங்கை ஸெபக்தக்ரோ தேசிய அணியில் இரட்டைச் சகோதரிகள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

கண்டி, கெந்தலியத்த கிராமத்தைச் சேர்ந்த மஹிந்த ரத்நாயக்கவின் மகள்களான ஹசினி சந்துனிக்கா, ஸஹினி ஹிருனிகா ஆகியோர் இரட்டை சகோதரிகள் ஆவர்.

அம்பதென்னை புஷ்பதான கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், கண்டி மஹாமாயா பாலிகா கல்லூரியில் க.பொ.த. உயர் தரம் கற்ற ஹசினி சந்துனிகா, ஸஹினி ஹிருனிகா சபரகமுவ பல்கலைக் கழகத்தில் உடற் கல்வி பட்டதாரிகளாவர்.

பாடசாலை காலம் முதல் விளையாட்டுகளில் விசேட திறமைகளைக் காட்டிய இவ்விரட்டை சகோதரிள் கால்பந்தாட்டத்தில் தேசிய மட்ட வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

மெய்வல்லுநர் போட்டிகளில் அகில இலங்கை மட்டம் வரை தகைமை பெற்றுள்ளதுடன் கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற 13 வது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் கோ-கோ



(Kho-Kho) விளையாட்டுப் போட்டியில் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்தனர்.

புத்தளம் Kumpulan Melayu Di (KMP) பெண்கள் அணியின் வீராங்கனைகளான ஹசினி - ஸஹினி இரட்டை சகோதரிகள் இலங்கை ஸெபக்தக்ரோ அணியில் அங்கத்துவம் வகிப்பதுடன் இம்மாத இறுதி வாரத்தில் பங்களாதேஷ், டாக்கா தலைநகரில் நடைபெறும் நான்காவது தெற்காசிய ஸெபக்தக்ரோ சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை மகளிர் அணியில் விளையாடுகின்றனர்.




முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## இந்தியாவை வென்ற பங்களாதேஷ்

இந்தியாவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது. ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

இந்தியா: 186/10 (41.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் 73 (70) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 5/36, எபொடொட் ஹொஸைன் 4/47, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/43)

பங்களாதேஷ்: 187/9 (46 ஓவ. ) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 41 (63), மெஹிடி ஹஸன் மிராஸ் ஆ.இ 38 (39), ஷகிப் அல் ஹஸன் 29 (38) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 3/32, வொஷிங்டன் சுந்தர் 2/17, குல்டீப் சென் 2/37, ஷர்துல் தாக்கூர் 1/21, தீபக் சஹர் 1/32)

போட்டியின் நாயகன்: மெஹிடி ஹஸன் மிராஸ்

தெற்காசிய கராத்தே போட்டியில்

# வெள்ளிப் பதக்கம் வென்ற மட்டுவின் துஷ்யந்தன்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

தெற்காசிய கராத்தே சம்மேளனத்தால் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடாத்தப்பட்ட தெற்காசிய கராத்தே போட்டியில் இலங்கைக்கு 16 தங்கப் பதக்கங்களும், 20 வெள்ளிப் பதக்கங்களும், 27 வெண்கலப் பதக்கங்களுமாக மொத்தம் 63 பதக்கங்கள் கிடைக்கப் பெற்றன.

இதில் கிழக்கு மாகாணத்திலிருந்து மட்டக்களப்பை சேர்ந்த



துஷ்யந்தன் என்னும் மாணவன் 21 வயதுக்குட்பட்ட 55 கிலோ கிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர், 2015ஆம் ஆண்டில் முதன்முதலாக பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய கராத்தே போட்டியில் வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றதன் மூலம் தனது முதலாவது தேசிய பதக்கத்தைப் பெற்றதோடு, அதன் பின்பும் தேசிய பதக்கத்தைப் பெற்று இறுதியாக சர்வதேச பதக்கத்தை பெற்றுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 06 டிசெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.